வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 06 | 20.03.2025 வியாழக்கிழமை | இதழ் : 81 | பக்கங்கள் : 12

## தேசபந்து தென்னக்கோன் நீதிமன்றில் சரணடைந்தார்



### இன்றுவரை அவருக்கு விளக்கமறியல்

கொழும்பு, மார்ச் 20


**தேடப்பட்டு வந்த முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் நேற்று புதன்கிழமை காலை மாத்தறை நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தார். சரணடைந்தவரை இன்று வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.**

கடந்த 2023 டிசெம்பர் 13ஆம் திகதி மாத்தறை - வெலிகம - பலன பிரதேசத்தில் ஹோட்டல் ஒன்றில் துப்பாக்கிச்சூடு இடம்பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் உட்பட சி. ஐ. டியின் 8 அதிகாரிகளை கைது செய்ய மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

இதனைத் தொடர்ந்து கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி முதல் தென்னக்கோன் தலைமறைவானார். அவரைத் தேடும் பணியில் 6 பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டன.

தலைமறைவாக இருந்தநிலையிலேயே தென்னக்கோன் கைது உத்தரவுக்கு தடை கோரி எழுத்தாணை மனுவை மேன் முறையீட்டு நீதிமன்றில்

11



## யாழ்ப்பாண பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா ஆரம்பம்!

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 39ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா நேற்று புதன்கிழமை துணைவேந்தர் சி. சிறீசற்குணராஜா தலைமையில் ஆரம்பமானது.

மரபார்ந்த பண்பாட்டு அணிவகுப்புடன் பட்டமளிப்பு நிகழ்வுகள் ஆரம்பமாகின. பல்கலைக்கழகத்தின் பீடாதிபதிகள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், அலுவலர்கள் அணிவகுத்து வர, கொடி, குடை, ஆல வட்டங்கள் சகிதம் விழா அரங்குக்கு

11



## தமிழ் தேசிய மக்கள் முன்னணி யாழில் நேற்று வேட்புமனு தாக்கல்!

யாழ்ப்பாணம், மார்ச் 20

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியில் போட்டியிடும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்று புதன் கிழமை யாழ்ப்பாணம் மாவட்டத்தின் சகல உள்ளூராட்சி சபைகளுக்குமான வேட்புமனுக்களை தாக்கல் செய்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்

11

## தென்னக்கோனின் வீட்டிலிருந்து 1,009 மதுபான போத்தல்கள் மீட்பு


கொழும்பு, மார்ச் 20

நீதிமன்றில் சரணடைந்த தேசபந்து தென்னக்கோனின் வீட்டில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட மதுபான போத்தல்கள் கண்டுபிடிக்கப்பட்டன என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால கூறியுள்ளார்.

தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால நேற்று சிறப்பு அறிக்கை ஒன்றை வாசித்தார். அதிலேயே

11

## இலங்கை தமிழ் அரசு கட்சியும் யாழ்ப்பாணத்தில் வேட்புமனு!



யாழ்ப்பாணம், மார்ச் 20

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகள் தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சியும் நேற்றைய தினம் யாழ். மாவட்டத்தில் வேட்புமனுக்களை தாக்கல் செய்தது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 17 சபைகளுக்குமான வேட்புமனுக்களை அந்தக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம். ஏ. சுமந்திரன் தலைமையிலான குழு வினர் நேற்று தாக்கல் செய்தனர்.

இதேவேளை, வவுனியா, முல்லைத்தீவு

11

## வேட்புமனு தாக்கல் இன்றுடன் நிறைவு

கொழும்பு, மார்ச் 20

நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கான வேட்புமனுக்களை ஏற்றுக்கொள்வதற்கான காலஎல்லை இன்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைகிறது.

வேட்புமனுக்களை தாக்கல் செய்த கட்சிகள் மற்றும் சுயேச்சைகள் இன்றைய தினம் நண்பகல் 12 மணி முதல் மதியம் 1.30 மணி வரை

11

## 11,081 குடும்பங்களுக்கு யாழில் காணி இல்லை!

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 11 ஆயிரத்து 81 குடும்பங்கள் தமக்குக் காணிகள் இல்லை என்றும் தங்களுக்கு காணிகளை வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளன என்று மாவட்ட செயலக தரவுகள் தெரிவிக்கின்றன.

இதன்படி, கடந்த 2024 - 2025ஆம் ஆண்டு

11

## தமிழ் அரசியல் கட்சிகள் ஓரணியில் திரள வேண்டும்!

### ஆனந்தசங்கரி தெரிவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 20

அனைத்துத் தமிழ் அரசியல் கட்சிகளும் ஓரணியில் திரண்டு தமிழ் மக்களின் பிரச்னைகளை தீர்க்க முன்வர வேண்டும் - இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி அழைப்பு விடுத்துள்ளார்.

நேற்றைய தினம் அவர் கிளிநொச்சியிலுள்ள தனது கட்சியின் பணிமனையில் நடத்திய

11

### உள்ளூராட்சி தேர்தல்:

## த.வி.கூட்டணி போட்டியிடாது

கிளிநொச்சி, மார்ச் 20

நடைபெறவுள்ள உள்ளூராட்சி தேர்தலில் தமிழர் விடுதலை கூட்டணி போட்டியிடாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணையாளர் நாயகத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி அனுப்பி வைத்த கடிதத்திலேயே

11

## மன்னம்பேரி, இசைப்பிரியா மரணங்களுக்கு நீதி எப்போது?

### சபையில் சிறீதரன் எம். பி. கேள்வி



கொழும்பு, மார்ச் 20

இலங்கை இராணுவத்தால் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்ட ஜே. வி. பியின் பிறேமாவதி மன்னம்பேரி, இசைப்பிரியா உள்ளிட்டோருக்கான நீதி எப்போது கிடைக்கும் - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் சி. சிறீதரன் எம். பி.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய போதே இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், "பட்டலந்த என்பது, 1988 - 1989 காலப்பகுதியில் நாட்டில் இருந்த ஜே. வி. பி. போராளிகளை கைது செய்து சித்திரவதை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட இடம். அது தொடர்பிலான ஆணைக் குழு அறிக்கை இவ்வளவு காலம் கிடப்பில் இருந்து

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவின் பதிவுகள்...!



















## பூநகரி உள்ளிட்ட சில பிரதேச சபைகளுக்கு மார்ச் 26 வரை கட்டுப்பணம் செலுத்தலாம்!

கொழும்பு, மார்ச் 20

பூநகரி பிரதேச சபை, மன்னார் பிரதேச சபை மற்றும் தெஹியத்தகண்டிய பிரதேச சபை ஆகியவற்றுக்கான கட்டுப்பணத்தை செலுத்துவதற்குக் கடந்த 10 ஆம் திகதி முதல் எதிர்வரும் 26 ஆம் திகதி கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் 27ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை குறித்த மூன்று பிரதேச சபைகளுக்குமான வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதிக்குப் பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தக் கூடிய சாத்தியங்கள் உள்ளன என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## வவுனியா புதிய பேருந்து நிலையத்தின் இருக்கைகள் பராமரிப்பற்ற நிலையில்!



வவுனியா, மார்ச் 20

வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் காணப்படும் இருக்கைகள், அமரமுடியாதவாறு உடைந்து காணப்படுவதுடன் அவை பராமரிப்பின்றி காணப்படுகின்றன என்று பயணிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

அதுமட்டுமின்றி இருக்கைகள் உடைந்தும் பழுதடைந்தும் காணப்படுவதால் பயணிகள் பல மணிநேரம் நின்றுகொண்டிருக்க வேண்டிய நிலைமை உள் ளது. நீண்ட நேரம் நிற்க முடியாதவர்கள் - குறிப் பாக முதியவர்கள், அங்கவீனர்கள், நோயாளர்கள் இருக்கையில் அமரும் போது காயங்கள் ஏற்படு கின்றன என்றும் அத்து டன், இருக்கையிலிருந்து எழும்போது தடுமாறி விழும் நிலைமையும் காணப்ப டுகிறது என்று விசனம் தெரிவிக்கப்பட்டது.

வடமாகாணத்தின் பிரதான நுழைவாயிலாகவும், பல மாவட்டங்களில் இருந்து வந்து செல்வோர் அதிகமாக கூடும் இடமாகவும் உள்ள வவுனியா பிரதான பேருந்து நிலையத்தின் நிலை இவ்வாறு காணப்படுவதால் பயணிகள் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளாகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-10)

## அதிகளவான வாக்காளர்கள் கம்பஹா மாவட்டத்தில் பதிவு

கொழும்பு, மார்ச் 20

இம்முறை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அதிக எண்ணிக்கையிலான வாக்காளர்கள் கம்பஹா மாவட்டத்தில் பதிவாகியுள்ளதாக கம்பஹா பிரதி தேர்தல் ஆணையாளர் ரவீந்திர விக்ரமசிங்க தெரிவித்தார்.

அதன்படி, கம்பஹா மாவட்டத்தில் இம்முறை உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 18 இலட்சத்து 96 ஆயிரத்து 304 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

2024 பாராளுமன்றத் தேர்தலில் பதிவான வாக்காளர்களை விட 15 ஆயிரத்து 175 வாக்காளர்கள் அதிகரித்துள்ளதாக மாவட்ட தேர்தல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

(அ)

## புதுக்குடியிருப்பு பிரதேச கலாசார பேரவை கூட்டம்

முல்லைத்தீவு, மார்ச் 20

புதுக்குடியிருப்பு பிரதேச கலைஞர், எழுத்தாளர் ஒன்று கூடல் நிகழ்வும் புதுக்குடியிருப்பு பிரதேச கலாசாரப் பேரவையின் பொதுக்கூட்டமும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் இ. விஜயகுமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

வடக்கு மாகாண பண் பாட்டலுவல்கள் திணைக் களத்தின் அனுசரணையுடன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தால் நடத்தப்படுகின்ற இந்த நிகழ்வின் விசேட அம்சமாக கலாபூஷணம் நடராசா இராமநாதனுடைய 'மனதின் காயங்கள்' - கவிதைத் தொகுப்பு', 'உணர்வலைகள்' - சிறுகதைத் தொகுப்பு ஆகியவற்றின் ஒலி நூல் இறுவட்டுகளின் வெளியீடும் நடைபெறவுள்ளது. (ஐ)

## மருதனார்மடம் விபத்தில் முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 20

மருதனார்மடத்தில் மோட்டார் சைக்கிள் சைக்கிளை மோதிய விபத்தில் முதியவர் ஒருவர் உயிரிழந்தார்.

மருதனார்மடம் - உரும்பிராய் வீதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில் சைக்கிளில் பயணித்த 75 வயது முதியவரே உயிரிழந்தார்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தியவரும் சைக்கிளில் வந்த முதியவரும் காயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இருப்பினும் சைக்கிளில் பயணித்த முதியவர் உயிரிழந்தார். இந்த விபத்துத் தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ-05)

## ஆசிரியர் கலாசாலையில் திருவள்ளுவர் நினைவரங்கம்



யாழ்ப்பாணம், மார்ச் 20

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று புதன்கிழமை காலை திருவள்ளுவர் நினைவரங்கம் நிகழ்வு நடைபெற்றது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடந்த இந்த நிகழ்வை முதலாம் வருட ஆங்கில நெறி ஆசிரிய மாணவி தேவராசா தனுஷாயினி நெறிப்படுத்தினார். திருக்குறள் கலாநிதி ஓய்வுநிலை அதிபர் ஆ. வடிவேலு அதிதி பேச்சாளராக கலந்து கொண்டார்.

விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவர் இ. செந்தூர்ச்செல்வன் அதிதிக்கான அறிமுக உரையை ஆற்றினார். நிகழ்வில் ஆசிரிய மாணவி ஷாஜகான் பாத்திமா நுஷ்லா இஸ்லாமும் வள்ளுவமும் என்ற பொருளில் உரையாற்றினார். ஆசிரிய மாணவி செல்வி குறள் நெறி வாழ்வு என்ற பொருளில் கவிதை வழங்கினார்.

ஆங்கில நெறி ஆசிரிய மாணவி நிரோஜன் கௌசிகா திருக்குறள் குறித்த ஆங்கில மொழி மூலமான விவரண காணொலி ஒன்றை தயாரித்து காட்சிப்படுத்தினார். அதிதிப் பேச்சாளர் ஆ வடிவேலு கலாசாலை சமூகத்தால் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
20.03.2025 வியாழக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 06

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## அரசியல் சுடலை ஞானம்

தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி தமிழ் மக்களின் பிரச்னையை தீர்ப்பதற்காக அனைத்துக் கட்சிகளும் ஓரணியில் வரவேண்டும் என்று தெரிவித்திருக்கிறார். இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூலம் அரசியலை முன்னெடுக்க முடியாது என்பதை உணர்ந்தே எஸ். ஜே. வி. செல்வநாயகம் தமிழர் விடுதலை கூட்டணியை உருவாக்கினார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி என்று கூறப்பட்டாலும்கூட, அது ஒரு கூட்டணியாக இருக்கவில்லை. மாறாக, ஒரு தனிக்கட்சியாகவே மக்களின் மனதில் இடம்பிடித்தது. ஏனெனில், கூட்டணியில் ஒன்றுபடுவதற்கு உடன்பட்டிருந்த சௌமியமூர்த்தி தொண்டமான் மலையக மக்களுக்கான அரசியலை முன்னெடுப்பதற்கு செல்வநாயகத்துடன் அணி சேர்ந்திருப்பது பொருத்தமானது அல்ல என்னும் அடிப்படையில் பின்னர் வெளியேறிருந்தார். ஜீ. ஜீ. பொன்னம்பலம் பெயரளவில் செல்வநாயகத்துடன் கைகோத்திருந்தாலும்கூட அவருக்குத் தனிநாட்டுக் கோரிக்கையில் உடன்பாடு இருந்ததாகக் கூறமுடியாது.

தனிநாட்டு விவகாரத்தில் செல்வநாயகத்துக்குக்கூட எந்தளவு உடன்பாடு இருந்தது என்பதும்கூட பதிலில்லாத கேள்விதான். ஏனெனில், ஆரம்பத்தில் தனிநாட்டுக் கோரிக்கையை செல்வநாயகம் ஆதரித்திருக்கவில்லை. பின்னர் அவரின் அரசியல் தீர்வு முயற்சிகள் தோல்வியடைந்திருந்த நிலையில்தான் தனிநாட்டு சிந்தனையை நோக்கி நகர்ந்தார். அப்போதும்கூட அதனை எவ்வாறு அடைவது என்னும் கேள்விக்கு அவரிடம் பதில் இருந்திருக்கவில்லை. தமிழ் மிதவாத தலைவர்கள் அனைவரின் பிரச்னையும் ஒன்றுதான். அதாவது, பிரச்னைகளை பேசுமளவுக்கு அதனைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் எவற்றையும் அவர்கள் அறிந்திருக்கவில்லை. இதன் காரணமாகத்தான் இளைஞர் இயக்கங்கள் மிதவாத அரசியல் தலைவர்களை வெறுத்துத் தனிவழியில் செல்லும் நிலைமை உருவானது.

இன்று திரும்பிப் பார்த்தால் தமிழ் மிதவாத அரசியல் தலைவர்கள் என்போர் அனைவரின் முயற்சியும் விழலுக்கு இறைத்த நீர் என்பதாகவே முற்றுப்பெற்றிருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் கொடுத்தும் - மெய்சிலிர்க்க வைக்கும் தியாகங்களைப் புரிந்தும் - இறுதியில் எதனையும் அடையத் தகுதியற்ற ஓர் இனமாகவே ஈழத் தமிழர் சமூகம் காட்சியளிக்கிறது.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் ஆகக்குறைந்தது இருக்கின்ற நிலைமையை ஓரணியாக எதிர்கொள்ள வேண்டும் - அது ஒன்றுதான் இன்றைய சூழலில் அரசியல்ரீதியில் பயனுள்ளதாக அமையும் என்னும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இருந்தபோதிலும்கூட, அதனை செவிமடுக்கும் நிலையில் எந்தவொரு கட்சியும் இல்லை.

செல்வநாயகத்தால் ஆரம்பிக்கப்பட்ட முதல் கட்சியான இலங்கை தமிழ் அரசு கட்சி நீதிமன்ற விசாரணையில் இருக்கிறது. மறுபுறம் அன்றைய சூழலில் பிரதானமான அனைத்து தமிழ் தரப்புகளையும் வரலாற்றுரீதியாக ஒன்றிணைத்த கட்சியான தமிழர் விடுதலை கூட்டணி ஆனந்தசங்கரி என்னும் ஒரு தனிநபரின் உடைமையாக சுருங்கிப் போய்க்கிடக்கிறது. ஆனந்தசங்கரி முன்னுதாரணமுள்ள ஒருவராக நடந்திருந்தால் பல்வேறு கட்சிகளையும் ஒன்றிணைக்கும் ஓர் அடித்தளமாக தமிழர் விடுதலைக் கூட்டணியை மறுஉருவாக்கம் செய்திருக்க முடியும். ஆனால், அதற்கான தூரநோக்கும், பொறுப்புகளை புதிய தலைமுறையினரிடம் ஒப்படைக்கும் சிந்தனையும் ஆனந்தசங்கரியிடம் இருந்திருக்கவில்லை. தூரநோக்கும் - புதியவர்களை அரவணைக்கும் பக்குவமும் இல்லாதபோது, ஒற்றுமை என்பது கானல் நீர் மட்டுமே!

# உள்ளூராட்சி தேர்தலிலும் ஒத்துழைப்பு தரவேண்டும்

### அதிகாரிகளிடம் கோரிய யாழ். தெரிவித்தாட்சி அலுவலர்

*யாழ்ப்பாணம், மார்ச் 20*

பாராளுமன்ற தேர்தலின் போது எத்தகைய ஒத்துழைப்பு கிடைத்ததோ அதே போல் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் ஒத்துழைப்பு கிடைக்க வேண்டும் என்று யாழ். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

பெயர் குறித்த நியமனப் பத்திரங்களை பரிசீலிப்பதற்கான உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்களுடனான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நடைபெற்றபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நடைபெறவுள்ள உள்ளூராட்சி அதிகார சபைக்கான நியமனப் பத்திரம் ஏற்கும் இறுதி தினம் வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி வரையாகும். பெயர் குறித்த நியமன பத்திரங்களை பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்ட உதவித் தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களின்போது வழங்கிய ஒத்துழைப்புக்கு அமைய, இம் முறையும் வினைத்திறனாக செயல்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

மேலும், எமது மாவட்டத்துக்கு புதிதாக நியமனம் பெற்று வந்துள்ள உதவி தேர்தல் ஆணையாளர் இ. சசீலனை வரவேற்பதாகவும், இடமாற்றம் பெற்றுச் சென்ற உதவித் தேர்தல் ஆணையாளர் இ. கி .அமல்ராஜுக்கு தங்கள் அனைவரின் சார்பிலும் தமது நன்றியினைத் தெரிவித்ததுடன், தேர்தல் நீதியாகவும் சுதந்திரமாகவும் நடைபெற அனைவரது ஒத்துழைப்பினையும் நல்குமாறு கேட்டுக்கொண்டார். (ஐ)

# பண்டிகைக் காலத்தில் அரசால் நுகர்வோருக்கு நிவாரண பொதி

*கொழும்பு, மார்ச் 20*

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் நுகர்வோருக்கு நிவாரண பொதி வழங்கப்படும் என வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்காக 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் - இதன்படி 5000 ரூபாய் பெறுமதியான பொதி 2500 ரூபாவிற்கு வழங்கப்படும். அதற்கான பணிகளை தற்போது லங்கா சதொச நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

5 கிலோகிராம் நாட்டு அரிசி இல்லையென்றால், அதற்கு பதிலாக 3 கிலோ கிராம் நாட்டு அரிசி மற்றும் கோதுமை மாவை பெற்றுக் கொள்ளலாம். அல்லது சிவப்பு அரிசி மற்றும் 2 கிலோ கிராம் கோதுமை மாவையும் பெறும் வாய்ப்பு உள்ளது.

அத்துடன் 2 கிலோ கிராம் பெரிய வெங்காயம், 2 கிலோ கிராம் உருளைக் கிழங்கு, 2 கிலோ கிராம் பருப்பு, 1 ரின் மீன், 3 கிலோ கிராம் சிவப்பு சீனி, 2 கிலோ கிராம் கோதுமை மா, 2 சமபோஷ பைக்கெற்றுகள், 70 கிராம் மற்றும் 90 கிராம் சோயாமீற் பைக்கெற்றுகள் 4 வழங்கப்படவுள்ளன.

இதன்படி, 15 முதல் 17 கிலோகிராம் வரையிலான பொருட்கள் அடங்கிய ஒரு பொதி வழங்கப்படுகிறது - என்றார். (அ)

# கிராண்ட்பாஸ் துப்பாக்கிச்சூடு; குற்றக் குழு உறுப்பினர் கைது!

*கொழும்பு, மார்ச் 20*

கொழும்பு - கிராண்ட்பாஸில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துக்கு உதவிய குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் ஒருவர் கைது செய்யப்பட் டார்.


பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் கிராண்ட்பாஸ், கொஸ்கஸ் சந்தி பகுதியில் உள்ள பேருந்துத் தரிப்பிடத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார்.

வெல்லம்பிட்டி பிரதேசத்தில் வசிக்கும் 26 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வெளிநாட்டில் உள்ள பாதாள உலகக் கும்பலின் தலைவரும் போதைப் பொருள் கடத்தல்காரருமான ‘சேதவத்தை கசுன்’ என்று அழைக்கப்படும் இஷார லக்மால் ஹேவத் என்பவரின் உதவியாளர் ஒருவர் எனவும் பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபரிடமிருந்து 12 கிராம் 120 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப்போய் பொல்லாப் ஆக முடியும். வியாபாரத்தில் வேலையாட்களின் ஒத்துழைப்பின்மையால் லாபம் குறையும். பொறுமை தேவைப்படும்.

**இடபம்**
விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர் ஆவார்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு உதவுவீர்கள்.

**மிதுனம்**
வழக்கில் சாதகமாக் தீர்ப்பு வரும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார். அரசால் அனுகூலம் உண்டு. உத்தியோகத்தில் உங்கள் கருத்திற்கு ஆதரவு பெருகும்.

**கடகம்**
பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். வேற்றுமதத்தவர் உதவுவார். வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். கனவு நனவாகும் நாள்.

**சிம்மம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. தாயாருடன் வீண் விவாதம் வந்து போகும். வியாபாரத்தில் பங்குதாரர்களின் பிரச்னை தீரும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கன்னி**
உங்களிடம் பழகும் நண்பர்கள் உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். அழகும் இளமையும் கூடும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள்.

**விருச்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சில காரியங்களை போராடி முடிப்பீர்கள். வியாபாரத்தில் அவசர முடிவுகளை தவிர்க்கவும். சக ஊழியர்களின் சொந்த விஷயங்களில் தலையிட வேண்டாம்.

**தனுசு**
விவாதங்களை தவிர்ப்பது நல்லது. சகோதர வகையில் மனத்தாங்கல் வரும். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் மறைமுக பிரச்னைகள் வரக்கூடும்.

**மகரம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். வியாபார ரீதியாக சில முக்கியஸ்தர்களை சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள். சிறப்பான நாள்.

**கும்பம்**
மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். குவியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரி உங்களை மதிப்பார்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் யாவும் நீங்கும். வியாபாரத்தில் தள்ளிப் போன வாய்ப்புகள் தேடி வரும். இழந்த உரிமையை பெறுவீர்கள். மனநிறைவு கிட்டும் நாள்.

# வடக்குக்கு வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பது தொடர்பில் பயிற்சி கருத்தரங்கு!



யாழ்ப்பாணம், மார்ச் 20

“வடக்கு மாகாணத்தில் பொருளாதார அபிவிருத்தியை மேம்படுத்துதல் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல்“ தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கு வடக்கு மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனின் ஏற்பாட்டில் யுனொப்ஸ் நிறுவனத்தில் கென்யாவில் பணிபுரியும் கலாநிதி வி. நவநீதன் இந்தப் பயிற்சி கருத்தரங்கில் வளவாளராகப் பங்கேற்றார்.

ஆரம்ப நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் மு. நந்தகோபாலன், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் - திட்டமிடல் எம்.கிருபாசுதன், பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம் - பொறியியல் சேவைகள் எந்திரி ந.சுதாகரன், வடக்கு மாகாண ஆளுநரின் இணைப்புச் செயலாளர் சர்வானந்தா ஆகியோர் பங்கேற்றனர்.

ஆளுநரின் செயலாளர், இந்தப் பயிற்சிக் கருத்தரங்கை ஆளுநர் ஒழுங்கு செய்திருப்பதன் நோக்கத்தை தெளிவுபடுத்தினார். வடக்கு மாகாண பிரதி பிரதம செயலாளர் - திட்டமிடல் எம்.கிருபாசுதன் மாகாணத்தின் ஒட்டுமொத்த நிலைமை தொடர்பில் சுருக்க விளக்கத்தை முன்வைத்தார். அதன் பின்னர் வளவாளர் கலாநிதி வி.நவநீதனால் யிற்சிக் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

வடக்கு மாகாணத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களில் அபிவிருத்தி மற்றும் திட்டமிடலுடன் தொடர்புடையதாகப் பணியாற்றும் திணைக்களத் தலைவர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இதில் பங்கேற்றனர். (ஐ-05)

# கைது செய்ய சென்ற பொலிஸாரை தாக்கிவிட்டு தப்பிய சந்தேகநபர்!

யாழ்ப்பாணம், மார்ச் 20

நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்திருந்த நபரை கைது செய்யச் சென்ற பொலிஸாரை தாக்கிவிட்டு சந்தேகநபர் தப்பிச் சென்றுள்ளார்.

தெல்லிப்பழையில் நடந்த இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய பிடியாணை பிறப்பிக்கப்பட்ட நபரை பொலிஸார் கைது செய்யச் சென்றுள்ளனர்.

அப்போது, சந்தேகநபர் தகாத வார்த்தை பிரயோகங்களை பிரயோகித்து பொலிஸார் மீது கொட்டனால் தாக்குதல் நடத்தியுள்ளார். பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தாக்குதலுக்கு உள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். சந்தேகநபரை தெல்லிப்பழை பொலிஸார் தேடி வருகின்றனர். (ஐ-05)

# 304 குறைநிரப்பு நியமனங்கள் சுகாதார அமைச்சு இணக்கம்!

யாழ்ப்பாணம், மார்ச் 20

நான்கு அம்ச கோரிக்கைகளை முன்வைத்து அரச வேலையற்ற சித்த மருத்துவ சங்கத்தினர் சுகாதார அமைச்சில் கலந்துரையாடலில் திங்கட்கிழமை நடைபெற்றது. இதில், சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டன.

ஏற்கனவே, உள்ளக பயிற்சியை முடித்த 1,689 ஆயுள் வேதம், சித்த மற்றும் யுனானி வேலையற்ற மருத்துவர்களுக்கு உடனடி நியமனங்களை வழங்குதல்.

தற்போது உள்ளக பயிற்சி பெற்று வரும் 374 உள்ளக மருத்துவ அலுவலர்களுக்கு அவர்களின் பயிற்சி முடிந்தவுடன் உடனடி நியமனங்களை வழங்குதல்.



எதிர்வரும் ஆண்டுகளில் உள்ளகப் பயிற்சியை முடித்தவுடனேயை உடனடி நியமனங்களை வழங்குதல், நாட்டின் மக்கள் தொகைக்கு ஏற்ப சுதேச மருத்துவர் எண்ணிக்கையையும் சமூகநல மருத்துவர் எண்ணிக்கையையும் அதிகரித்தல் போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

அந்தவகையில், சுவசிறிபாயவில் அமைந்துள்ள சுகாதார அமைச்சில் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் 304 குறை நிரப்பு நியமனங்களை முதற்கட்டமாக வழங்கவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியோர் கைது!

முல்லைத்தீவு, மார்ச் 20

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச் சென்றவரும், அனுமதிக்காக பிரதேச செயலருடன் முரண்பட்டவருமாக இருவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

முல்லைத்தீவு ஆலயம் ஒன்றுக்கு மணல் ஏற்றுவதற்கு வழங்கப்பட்ட அனுமதிபத்திரம் பின்னர் இரத்து செய்யப்பட்டது. எனினும், முன்னர் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை வைத்து மன்னாகண்டல் பகுதியில் மணல் அகழப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, பொலிஸார் முன்னெடுத்த விசேட நடவடிக்கையில் டிப்பர் ஒன்றை மறித்து சோதனையிட்ட பொலிஸார் ஒருவரை கைது செய்தனர். இதேநேரம், இந்த டிப்பருக்கு மணல் ஏற்றும் அனுமதி கேட்டு பிரதேச செயலருடன் தர்க்கத்தில் ஈடுபட்ட மற்றொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் இனப்படுகொலை நடந்ததென ஆணைக்குழு அமைக்கக் கோருவார்கள்!

## பட்டலந்த குறித்து சரத் வீரசேகர

கொழும்பு, மார்ச் 20

**வடக்கில் இனப்படுகொலை நடந்தது எனக்கூறி அது தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு ஆணைக்குழுவொன்றை தமிழ் டயஸ்போராக்கள் கோரக்கூடும் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

இலங்கை படையினர் போர்க்குற்றம் இழைக்க வில்லை. பரணகம குழுவில் இருந்த சர்வதேச நிபுணர்களும் இந்த விடயத்தை குறிப்பிட்டி ருந்தனர். இனப்படுகொலையும் நிகழ்த்தவில்லை. உலகிலேயே பெருமளவில் பணயக்கைதிகளை மீட்டு போரை முடித்த இராணுவம்தான் எமது நாட்டில் உள்ளது.



எனவே, போர்க்குற்றம் மற்றும் இனப்படுகொலை தொடர்பில் எமக்குள்ள குற்றச்சாட்டுகள் போலியான வையாகும். எனினும், குற்றச் சாட்டுகள் உண்மையென்பதை காண்பிப்பதற்கு, படலந்த அறிக்கை பயன்படுத்தக்கூடும்.

படலந்த அறிக்கை இங்கு வெளியாவதால், வடக்கில் இனப்படுகொலை நடந்தது எனக்கூறி அது தொடர்பில் டயஸ்போராக்கள் விசாரணை கோரலாம். எனவே, ஜெனிவா மாநாட்டில் பட்டலந்த அறிக்கை எதிரொலிக்கக்கூடும்- என்றார். (அ)

# சிறை அதிகாரிகளின் ஆசியுடன் நடந்ததா சஞ்சீவவின் கொலை?

கொழும்பு, மார்ச் 20

கொழும்பு குற்றப்பிரிவு இதுவரை நடத்திய விசார ணைகளில், புதுக்கடை நீதிமன் றத்தில் பாதாள உலகத் தலை வர் கணேமுல்ல சஞ்சீவ சுட்டுக் கொல்லப்பட்டமையானது, அன்றைய தினம் பாதுகாப்பு வழங்க வந்த சிறை அதிகாரிகள் குழு மற்றும் பாதுகாப்புப் படை உறுப்பினர்கள் குழுவின் அறிவுறுத்தலுடன் மேற்கொள் ளப்பட்டது என்பது தெரிய வந்துள்ளது.

புலனாய்வு விசாரணைகளை மேற்கோள்காட்டி தென்னி லங்கை ஊடகமொன்று வெளி யிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் கூறப்பட்டுள்ளது.

மேலும் குறித்த செய்தியில்- கணேமுல்ல சஞ்சீவ நீதிமன்றத் திற்கு அழைத்து வரப்பட்ட போது அவரது பாதுகாவல ராக செயல்பட்ட பிரதான சிறைச்சாலை அதிகாரியை கொழும்பு குற்றப்பிரிவு கைது செய்துள்ளது.

இதற்கமைய நீதிமன்ற உத்தரவுகளின் பிரகாரம் அவர் எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட் டுள்ளார்.

கணேமுல்ல சஞ்சீவ நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்ட நாளில் அவருக்கு பாதுகாப்பு அளித்த சிறைச் சாலை அதிகாரிகள் மற்றும் 12 சிறப்பு அதிரடிப்படை அதிகா ரிகளின் கையடக்க தொலை பேசிப் பதிவுகளின் அடிப்ப டையில் மேலதிக விசாரணை கள் நடத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ள னர். (அ)

# ஆயுத தாக்குதலுக்கு இலக்கான இளம் பெண் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, மார்ச் 20

வென்னப்புவ வைக்கல பகுதியில் உள்ள வீடொன்றில் கூரிய ஆயுத தாக்குதலுக்கு இலக்கான இளம் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் தெற்கு வைக் கல பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞர் ஒருவரே உயிரிழந்தார்.

காதல் உறவு காரணமாக ஏற்பட்ட குடும்ப தகராறில் இந்த கொலை இடம்பெற்ற தாக பொலிஸார் தெரிவித் தனர்.

மாரவில பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய சந்தேக நபர், இந் தக் குற்றம் தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# நகை கடையில் தங்க சங்கிலிகள் திருடிச் செல்ல முயன்றவர் கைது!

கொழும்பு, மார்ச் 20

மாத்தறை - அக்குரஸ்ஸ பிரதேசத்தில் உள்ள நகைக் கடை ஒன்றிலிருந்து தங்கச் சங்கிலிகளை திருடிச் செல்ல முயன்ற சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக அக்குரஸ்ஸ பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந் தேக நபர் குருணாகல், நிக்கவ ரெட்டிய பிரதேசத்தில் வசிக் கும் 35 வயதுடையவர் ஆவார். சந்தேக நபர் அக்குரஸ்ஸ பிரதே சத்தில் உள்ள நகைக் கடை ஒன் றுக்கு சென்றுள்ளார்.

இதன் போது சந்தேக நபர் நகை கடை யிலிருந்து 3 தங்கச் சங்கிலிகளை திருடிச் செல்ல முயன்றுள்ளார்.

இதனை அவதானித்த நகைக் கடையின் பணியாளர் கள், சந்தேக நபரை பிடித்து அக்குரஸ்ஸ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத் துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக் குரஸ்ஸ பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (அ)

# வரி குறித்த சிக்கலைத் தீர்க்கும் இணையவழி முன்பதிவு தளங்களை ஒழுங்குபடுத்த திட்டம்!

கொழும்பு, மார்ச் 20

வரி தொடர்பான சிக்கல் களைத் தீர்க்கும் வகையில் இணையவழி முன்பதிவு தளங்களை ஒழுங்குபடுத் துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள் ளார்.

தற்போதைய முன்பதிவு தளங்கள் அதிகாரப்பூர்வ பதிவு அல்லது வரி பங்களிப்புகள் இல்லாமல் செயல்படுவதாக அவர் குறிப்பிட்டார்.



இது தொடர்பில் பல விமர் சனங்கள் எழுந்தமையினால் இந்த நடவடிக்கைகள் எடுக் கப்பட்டுள்ளதாக அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அதன்படி, அவுஸ்திரேலி யாவின் பிரிஸ்பேனில் உள்ள இலங்கை குழுவொன்று இந்தத் துறையில் தற்போதைய ஏக போக உரிமையைக் குறைப்ப தற்காக ஒரு தடவை பயன்ப டுத்தப்படும் கடவுச்சொல் அடிப்படையிலான தளத்தை யும் உருவாக்கி வருவதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது. (அ)

# அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து பல்கலை விரிவுரையாளர் மரணம்!

கொழும்பு, மார்ச் 20

மத்திய அதிவேக நெடுஞ் சாலையில் இடம்பெற்ற விபத் தில் களனி பல்கலைக்கழகத்தின் மெய்யியல்துறையின் உள வியல் பிரிவின் விரிவுரையாளர் கலாநிதி குணேந்திர கயந்த உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருநாகலிலிருந்து மீரிகம நோக்கிச் சென்ற வானொன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் அதே திசையில் பயணித்த லொறியின் பின்பகுதியில் மோதியுள்ளது.

இதன்போது வேனின் சாரதி உட்பட 07 பேர் காயமடைந்து மீரிகம வைத்தி யசாலையில் அனுமதிக்கப் பட்ட நிலையில் ஒருவர் உயி ரிழந்துள்ளார்.

சடலம் மீரிகம வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பான மேல திக விசாரணை களை மீரிகம பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மகசின் சிறைக் கைதியின் மரணம் குறித்து விசாரணை!

கொழும்பு, மார்ச் 20

சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் சக கைதிகளால் தாக் கப்பட்டு கொழும்பு மகசின் சிறைச்சாலையின் கைதி ஒருவர் உயிரிழந்ததாக கூறப்படும் சம்ப வம் தொடர்பில் பொரளை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

54 வயதான கைதியொரு வரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுக்காக மஹரகம பொலிஸாரால் கைது செய்யப் பட்ட இவர் பெப்ரவரி 23 அன்று விளக்கமறியலில் வைக்கப்பட் டார்.

கொழும்பு மகசின் சிறைச் சாலையில் உள்ள இரண்டு அதி காரிகள், ஐஸ் போதைப்பொ ருள் வைத்திருந்தார் என்ற சந் தேகத்தின் பேரில் அந்த நப ரைச் சோதனை செய்ய முயன் றதாக தெரிவிக்கப்படுகிறது.

சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருளை விழுங்கியதாகவும், அதன் பின்னர் இரண்டு சிறைச் சாலை அதிகாரிகளும் மேலும் இரண்டு கைதிகளும் அவரைக் கொடூரமாக தாக்கியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனால், பலத்த காயம டைந்த கைதி சிறைச்சாலை மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டார். ஆனால் பின்னர் கொழும்பு தேசிய மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் மார்ச் 16 அன்று அவர் காலமானார். உயிரிழந்த வரின் மனைவி ஊடகங்களிடம் பேசுகையில், தனது கணவருக்கு சிறை அதிகாரிகள் உடனடி மருத் துவ சிகிச்சை அளிக்கத் தவறி விட்டதாகக் குற்றம் சாட் டினார்.

# மதுபான போத்தல்களுடன் பயணித்த லொறி விபத்து!

கொழும்பு, மார்ச் 20

கொழும்பு- இரத்னபுரி பிரதான வீதியில் எஹெலிய கொட பகுதியில் மதுபான போத்தல்களை ஏற்றிச் சென்ற கொள்கலன் லொறி ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள் ளாகியுள்ளது.

இதனால், குறித்த வீதியூ டான போக்குவரத்து முற்றிலுமாக தடைப்பட் டுள்ளது.

இந்த சம்பவம் காரணமாக அந்தப் பகுதியில் கடும் போக் குவரத்து நெரிசல் ஏற்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்ப டுகிறது.

வளைவு ஒன்றில் வேகமாக சென்றபோது கொள்கலன் லொறி கவிழ்ந்ததாகக் கூறப் படும் நிலையில், ஏராளமான மதுபானப் போத்தல்கள் சாலை யில் விழுந்து நொருங்கின. (அ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரம் 2024ஆம் ஆண்டு 5 வீதம் வளர்ச்சி!

## தொகைமதிப்பு திணைக்களம் தகவல்

கொழும்பு, மார்ச் 20

**2024ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் 5 வீதம் வளர்ச்சியடைந்துள்ளது.**

தொகைமதிப்பு புள்ளிவிவரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள 2024ஆம் ஆண்டுக்கான தேசிய கணக்கு மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டின் நான்காம் காலாண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.4 வீதமாக நேர்மறை வளர்ச்சியாக மதிப்பிடப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டின் இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்பு விலையில் 2023ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 2,74,19,804 மில்லியன் ரூபாவிலிருந்து இருந்து 2,98,98,564 மில்லியன் ரூபாவாக அதிகரித்து, 9 வீத நேர்மறை மாற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நடப்பு விலையில் விவசாயத்துறை 8.3 சதவீதமும், கைத்தொழில்துறை 25.5 வீதமும் சேவைத்துறை 57.5 வீதமும் பங்களித்துள்ளன.

2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் வீழ்ச்சியுற்ற மொத்த தேசிய உற்பத்தி, 2024ஆம் ஆண்டில் வளர்ச்சி போக்கைக் காண்பித்துள்ளது.

இது எதிர்காலம் குறித்த நம்பிக்கையான எதிர்பார்ப்புகளுக்கு வழிவகுத்துள்ளதாக தொகைமதிப்பு புள்ளிவிவரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# வைத்திய சேவைக்கு இடையூறு முன்னாள் படை அதிகாரி கைது

கொழும்பு, மார்ச் 20

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்காக சென்று, வைத்திய சேவைக்கு இடையூறு ஏற்படுத்திய முன்னாள் இராணுவ அதிகாரி ஒருவர் நுவரெலியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபர் பலத்த காயங்களுக்கு நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார். இதனையடுத்து வைத்தியசாலையில் பணிபுரியும் ஊழியர்களுடன் அவர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதுடன், தகாத வார்த்தை பிரயோகங்களை உபயோகித்து வைத்திய சேவைகளுக்கு இடையூறு ஏற்படுத்தியுள்ளார்.

இதன்போது நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் மகேந்திர சேனவிரத்ன சம்பவ இடத்துக்கு சென்ற நிலையில், அவரிடமும் வாக்குவாதத்தில்ஈடுபட்டதைத்தொடர்ந்து வைத்தியசாலைக்குள் நுழைந்து குழப்பத்தை ஏற்ப டுத்தியதாக வைத்திய சாலை நிர்வாகம் நுவரெலியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித் துள்ளது.

இதனையடுத்து குறித்த முன்னாள் இராணுவ அதிகாரி கைது செய்யப்பட்டதுடன் பொலிஸாரின் பாதுகாப்புடன் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# ட்ரம்பின் வரிக் கொள்கை இலங்கைக்கு பாதிப்பு தரும்

கொழும்பு, மார்ச் 20

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் புதிய வரிக் கொள்கை இலங்கை சில ஏற்றுமதி பொருட்களில் தாக்கத்தைச் செலுத்தும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதனை தவிர்ப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அரசாங்கம் கூறியுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதல் அமலுக்கு வரும் வகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் புதிய வரிக் கொள்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளார்.

இதனால் இலங்கையின் ஆடைகள், இறப் பர், தேங்காய் மற்றும் பிளாஸ் ரிக் ஏற்றுமதி பாதிக்கப்படலாம் என பிரதி அமைச்சர் அனில் ஜெயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

"ட்ரம்பின் வர்த்தகக் கொள்கையின் எதிர்மறை விளைவுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை ஏற்கனவே எடுத்துள்ளது. வாஷிங்டனில் உள்ள இலங்கைத் தூதுவர் ஏற்கனவே அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளார்.

இலங்கை அமெரிக்காவுடன் நல்ல இருதரப்பு உறவுகளைக் கொண்டுள்ளது. மேலும் அந்த நாட்டோடு வெற்றிகரமான ஈடுபாட்டையும் கொண்டிருக்கிறோம். இந்த விடயத்தில் அரசாங்கம் தீவிர அவதானம் செலுத்தியுள்ளது." என்றும் அவர் கூறினார்.(அ)

# ஊழல் புரிந்த அரசியல்வாதிகளை கைது செய்ய நடவடிக்கை தேவை!

## இரண்டாம் தலைமுறை அமைப்பு கோரிக்கை

கொழும்பு, மார்ச் 20

ஊழல் செய்த அனைத்து அரசியல்வாதிகளையும் கைது செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இரண்டாம் தலைமுறை அமைப்பின் பிரசார செயலாளர் சேனக அபேசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளது. ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே இங்கே குற்றவாளியாக குறிப்பிடப்படுகிறார். எனினும் ஏனைய குற்றவாளிகள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென தெளிவுபடுத்த வேண்டும்.

குறிப்பாக பசில் ராஜபக்ஷவை கைது செய்வதாக கூறினார்கள். ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர் மேற்கொண்ட கொடுக்கல்வாங்கல் பற்றிய விபரங்கள் எங்கே? இந்தியாவுக்கு சென்று அங்கு மேற்கொண்ட ஒப்பந்தங்களின் விவரங்கள் எங்கே?அனைத்து கோப்புகளும் தங்களிடம் இருப்பதாகவும் ஆட்சி அமைத்தவுடன் ஊழலுடன் தொடர்புடையோர் கைது செய்யப்படுவர் என்றும் கூறப்பட்டது. இதனை நாம் நினைவூட்ட விரும்புகிறோம். நாடு பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளவில்லை. வரி குறைக்கப்படாததால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளார்கள். ஆதலால் உறுதியளித்தவற்றை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்- என்றார். (அ)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அரசுக்கு சிவப்பு எச்சரிக்கை!

## கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, மார்ச் 20

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அரசாங்கத்துக்கு சிவப்பு எச்சரிக்கையாக அமையும் என ஐக்கிய மக்கள் சக்தியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

கடுவலை மாநகர சபை தேர்தலுக்கான வேட்பு மனுக்களை நேற்று தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - கடுவலை மாநகர சபை தேர்தலுக்கான வேட்பு மனுக்களை சுபவேளையில் தாக்கல் செய்துள்ளோம். இனி நாம் பிரசார நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளோம்.

தற்போதைய அரசாங்கத்துக்கு பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உண்டு. ஜனாதிபதிக்குரிய அதிகா ரமும் இருக்கிறது. இந்நிலையில் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரத்தையும் அவர்கள் கோருகிறார்கள். இப்போதுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி நாட்டுக்கு அவர்கள் எதுவும் செய்யவில்லை. மக்கள் ஏமாற் றப்பட்டிருக்கிறார்கள். இதனை தற்போது கிராமத்து மக்கள் உணர ஆரம்பித்துள்ளார்கள்.

கொழும்பு மாநகர சபைக்கு பொருத்தமான ஒருவரை மேயர் வேட்பாளராக கட்சி நியமிக்கும் என எதிர்பார்க்கிறேன். ஏராளமான தெரிவுகள் காணப்படுவதால் மேயர் வேட்பாளரை அறிவிப்பதற்கு காலதாமதமாகியுள்ளது. கடுவலை மாநகர சபை தேர்தலுக்கு திற மையாளவர்களை களமிறக்கி யுள்ளோம். அவர்கள் நிச்சயம் வெற்றி பெறுவார்கள்-என்றார். (அ)

# ரூபாவின் பெறுமதி உயர்வு!

கொழும்பு, மார்ச் 20

நேற்று முன்தினத்துடன் ஒப்பிடுகையில், நேற்று அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணய மாற்று விகிதங்களின் படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 291 ரூபாய் 80 சதம் விற்பனைப் பெறுமதி 300 ரூபாய் 60 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 377 ரூபாய் 76 சதம், விற்பனைப் பெறுமதி 391 ரூபா 93 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 317 ரூபாய் 48 சதம், விற்பனைப் பெறுமதி 330 ரூபாய் 38 சதம்.

சுவிஸ் பிராங் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 329 ரூபாய் 80 சதம், விற்பனைப் பெறுமதி 345 ரூபாய் 36 சதம்.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 202 ரூபாய் 65 சதம், விற்பனைப் பெறுமதி 211 ரூபாய் 30 சதம்.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 183 ரூபாய் 66 சதம், விற்பனைப் பெறுமதி 193 ரூபாய் 11 சதம். (அ)

# பஞ்சாயுதம் சின்னத்தில் களமிறங்கும் விமல் அணி!

கொழும்பு, மார்ச் 20

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தேசிய சுதந்திர முன்னணி தனித்து 'பஞ்சாயுதம்" சின்னத்தில் போட்டியிடவுள்ளது என்று அதன் தலைவர் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

336 உள்ளூராட்சிச்சபைகளில் பெரும்பாலான சபைகளுக்கு தனித்தே போட்டியிடவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் எமது அணிக்கு வெற்றிகிடைக்கும் என நான் நம்புகின்றேன். ஊருக்காகவும், நாட்டுக்காகவும் இந்த தேர்தலை பயன்படுத்துமாறு முற்போக்கு சக்திகளிடம் நான் கோரிக்கை விடுக்கின்றேன்-என்றார். (அ)

# விமானத்துக்குள் அநாகரிகமான செயல் 3 பாகிஸ்தானியர்களுக்கு எச்சரிக்கை!

கொழும்பு, மார்ச் 20

சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் அநாகரீகமாக நடந்து கொண்ட மூன்று பாகிஸ்தானிய இளைஞர்கள், கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றத்தால் கடுமையான எச்சரிக்கைக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

சுற்றுலாவுக்காக இலங்கைக்கு வந்திருந்த மூன்று நண்பர்களான குற்றம் சாட்டப்பட்டவர்கள், சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானம் மூலம் தாய்லாந்தின் பாங்காக்குக்கு புறப்பட்டுச் சென்றபோது இந்த சம்பவம் நடந்துள்ளது.

இருப்பினும், விமான இருக்கை தொடர்பான வாக்குவாதம், விமான நடவடிக்கைகளைப் பாதிக்கும் ஒரு வாக்குவாதமாக மாறியது.

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு முந்தைய குற்றப் பதிவுகள் எதுவும் இல்லை. சம்பவம் தொடர்பாக அவர்கள் மன்னிப்பு கேட்டிருந்தனர். மேலும் குற்றத்தை ஒப்புக்கொண்டிருந்தனர்.

இந்த உண்மைகளைக் கருத்தில் கொண்டு, கொழும்பு தலைமை நீதிபதி தனுஜா லக்மாலியின் கடுமையான எச்சரிக்கைக்குப் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# வடக்கு-கிழக்குத் தொழிற்சாலைகள் திட்டமிடப்பட்டு முடக்கப்பட்டுள்ளன!

## சபையில் சிறிதரன் எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 20

**வடக்கு-கிழக்கில் காணப்பட்ட பல தொழிற்சாலைகள் திட்டமிடப்பட்டு முடக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் தெரிவித்தார்.**

பாராளுமன்றில் கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

குறிப்பாக யுத்தத்தில் அழிவடைந்த கைத்தொழில் துறைகளை முன்னேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்து கருத்துரைத்த கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி, ஒட்டுச்சுட்டானில் உள்ள ஓடு உற்பத்தித் தொழிற்சாலையின் நடவடிக்கைகள் ஏலவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

பண்டார வன்னியன் என்ற பெயரில் குறித்த ஓடுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

அத்துடன் வெப்பத்தைக் குறைக்கும் வகையிலான திறன் கொண்ட செங்கல் உற்பத்தி நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேபோன்று பரந்தன் இரசாயனத் தொழிற்துறை வலயத்துக்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் அரச உப்பு என்ற அடிப்படையில் ஆணையிறவிலிருந்து எதிர்வரும் 29ஆம் திகதி முதல் மேசை உப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அங்கு வடக்கு இளைஞர் யுவதிகளுக்குத் தொழில் வாய்ப்பை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்-என்றார்.

இதற்கு தமது பாராட்டுக்களைத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன், ஆனையிறவு உப்பு மற்றும் குறிஞ்சாத்தீவு உப்பு என்ற வரலாற்றுப் பெயரிலேயே உப்புகள் விநியோகிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார். (அ)

# நெதர்லாந்துப் பெண் வீதி விபத்தில் மரணம்!

கொழும்பு, மார்ச் 20

அம்பேபுஸ்ஸ - திருகோணமலை வீதியின் பல்வெஹெர பகுதியில் முச்சக்கர வண்டியொன்று லொறியுடன் மோதியதில் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தம்புள்ளையிலிருந்து ஹபரணை நோக்கிச் சென்ற கார் ஒன்று கடை ஒன்றின் முன் நிறுத்துவதற்காக வீதியில் இடதுபுறமாகத் திரும்பியபோது அதே திசையில் சென்ற முச்சக்கர வண்டி ஒன்று காரின் பின்பகுதியில் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படாத போதிலும் அதே திசையில் பயணித்த மற்றுமொரு முச்சக்கரவண்டி மேற்படி வாகனங்கள் மீது மோதாமல் இருப்பதற்காக திடீரென வீதியின் வலது பக்கம் திரும்பி எதிர்த்திசையில் வந்த லொறியுடன் மோதியுள்ளது.

இந்த விபத்தில் முச்சக்கரவண்டியில் பயணித்த 02 வெளிநாட்டு ஆண்களும் 02 பெண்களும் படுகாயமடைந்ததுடன் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

54 வயதுடைய நெதர்லாந்து பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய லொறி கைது செய்யப்பட்டுள்ளதுடன், தம்புள்ளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட செலுத்திய கட்டுப்பணம் ஜேர்மனியர்!

கொழும்பு, மார்ச் 20

மாத்தளை மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக ஜேர்மன் நாட்டவர் ஒருவர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளார்.

அந்தப் பெண் இலங்கை குடியுரிமையைப் பெற்று தேர்தலில் போட்டியிட தகுதி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜேர்மன் பெண் ஒரு சுயேச்சைக் குழுவின் வேட்பாளராக கலேவல பிரதேச சபைக்கு போட்டியிட உள்ளார்.



வைப்புத்தொகையை செலுத்திய பின்னர், இலங்கையில் மாற்றங்களைக் கொண்டுவரும் நம்பிக்கையுடன் தான் போட்டியிடுவதாக ஜேர்மன் பெண் ஊடகங்களுக்குத் தெரிவித்தார். (அ)

# பட்டலந்த விசாரணைகளுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குவோம்

## ஐக்கிய தேசிய கட்சி அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 20

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் மீள விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டால், அமைச்சர் லால் காந்தவும் அழைக்கப்பட வேண்டும். விசாரணைகளுக்கு எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்.

நாம் தவறிழைத்திருந்தால் தண்டனையை ஏற்கவும் தயாராக உள்ளோம் என ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் தலதா அத்துகோரள தெரிவித்துள்ளார்.

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை குறித்து இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐ.தே.க. அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாட்டின் நன்மைக்காக சேவையாற்றிய ஒரு கட்சியாகும்.

அக்கட்சியை இன்று பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையுடன் தொடர்புபடுத்தி பல்வேறு கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன.

பட்டலந்தவில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் எந்தவொரு காரணத்துக்காகவும் நடைமுறைப்படுத்த முடியாத, 1948ஆம் ஆண்டு ஆணைக்குழு சட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகள் குறித்து மீண்டும் ஆராயவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்றத்தில் இது குறித்த விவாதமொன்றும் இடம்பெறவுள்ளது.

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் கருத்துக்களை தெரிவிக்க வேண்டியது ஐக்கிய தேசிய கட்சியே அன்றி, ஜே.வி.பி. அல்ல. முறைமை மாற்றம் எனக் கூறி அரசியல் தலைவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு குறைக்கப்பட்டது.

யுத்தத்தின் போது செயல்பட்ட முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பும் குறைக்கப்பட்டுள்ளது.

அன்றைய கால கட்டத்தில் ஜே.வி.பி.யினரிமிருந்து ஏனைய கட்சிகளின் அரசியல்வாதிகளைப் பாதுகாப்பதற்காகவே முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவுக்கு பாதுகாப்பு வழங்கினார்.

அந்த பாதுகாப்பை நீக்கும் உரிமை தற்போதைய அரசாங்கத்துக்கு இருக்கிறது.

காரணம் அரசியல்வாதிகளுக்கு கட்டாயம் பாதுகாப்பு வழங்க வேண்டிய சூழல் இவர்களாலேயே உருவாக்கப்பட்டது.

இந்த ஆணைக்குழு விசாரணைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமானால் முதலில் அமைச்சர் லால் காந்த அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.

எந்தவொரு விசாரணைகளுக்கும் நாமும் தயாராக இருக்கின்றோம்.

காரணம் ஜே.வி.பி. கிளர்ச்சிகளின் போது ஐ.தே.க.வே பாரியளவில் பாதிக்கப்பட்டது.

அரசியல்வாதிகள் மாத்திரமின்றி இளைஞர், யுவதிகளைக் கொல்ல ஆரம்பித்ததும் இவர்களே.

இவ்வாறானவர்கள் தான் இன்று பட்டலந்த ஆணைக்குழு பற்றி பேசுகின்றனர்.

2015இல் பிறிதொருவர் நிதி அமைச்சராக இருந்த போது, அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மீது மத்திய வங்கி பிணைமுறி குற்றச்சாட்டுக்களை முன்வைத்து மக்களின் கவனத்தை திசை திருப்பினர்.

அதேபோன்று தற்போது தேர்தலை அடிப்படையாகக் கொண்டு பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் பேசுகின்றனர்.

2004ஆம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆட்சி காலத்தில் அமைச்சுப் பதவிகளை வகித்த போது ஏன் இவர்கள் பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

34 ஆண்டுகளின் பின்னர் இது தொடர்பில் பேச வேண்டிய தேவை ஏன் ஏற்பட்டது? செயற்பாட்டு அரசியலிலிருந்து விலகியிருக்கும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கண்டு ஏன் அச்சப்படுகின்றனர்?

எனவே ஜே.வி.பி.யினர் மாத்திரமின்றி கடந்த காலங்களில் கொல்லப்பட்ட அனைவர் தொடர்பிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

# பொடி லெசிக்கு பிணை பெறுவதற்காக இரு சட்டத்தரணிகள் இந்தியா பயணம்!

கொழும்பு, மார்ச் 20

இந்தியாவில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றக் கும்பல் உறுப்பினரான பொடி லெசி எனப்படும் ஜனித் மதுசங்கவுக்கு சட்ட ஆலோசனை வழங்கவும் பிணை பெறுவதற்காகவும் இரண்டு சட்டத்தரணிகள் நேற்று முன் தினம் மதியம் கட்டுநாயக்க விமான நிலையத்தினூடாக இந்தியாவின் மும்பை நோக்கிப் பயணமாகியுள்ளனர்.

பொடி லெசி மீது இந்தியாவுக்குள் சட்டவிரோதமாக நுழைந்தமை தொடர்பான குற்றச்சாட்டு மட்டுமே உள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

தங்களது சேவை பெறுநருக்காகப் பல இந்தியச் சட்டத்தரணிகள் தற்போது அங்கு பணியாற்றி வருவதாகவும், இந்தியாவில் அவருக்குப் பிணை வழங்கப்பட்டிருந்தாலும், இலங்கையில் பொடி லெசிக்கு இன்னும் பாதுகாப்பு பிரச்னை இருப்பதாகக் குறித்த சட்டத்தரணிகள் இருவரும் கூறினர்.

பொடி லெசிக்கு எதிரான வழக்கு எதிர்வரும் மார்ச் 21ஆம் திகதி இந்தியாவின் மும்பையில் உள்ள நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட உள்ளது. (அ)

# தேசபந்து தென்னக்கோன் குறித்து பாராளுமன்றில் விசேட அறிக்கை!

கொழும்பு, மார்ச் 20

நீதிமன்றில் சரணடைந்த முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தொடர்பில் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால நேற்று பாராளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றை விடுத்தார்.

பல நாட்களாக தலைமறைவாக இருந்த தேசபந்து தென்னக்கோன் மாத்தறை நீதிமன்றத்தில் சரணடைந்துள்ளதாக அமைச்சர் அங்கு குறிப்பிட்டார்.

அத்துடன் நேற்று முன் தினம் குற்றப் புலனாய்வு திணைக்கள குழுவொன்று ஹோகந்தர பகுதியில் அமைந்துள்ள முன்னாள் பொலிஸ்மா அதிபரின் வீட்டைச் சோதனையிட்டதாகவும் அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

795 வெளிநாட்டு மதுபானப் போத்தல்களும், 1009 மதுபான போத்தல்களும் அங்கு காணப்பட்டதாகவும் ஆனந்த விஜேபால குறிப்பிட்டார்.

மேலும், அவரது துப்பாக்கிகள் என சந்தேகிக்கப்படும் கைத்துப்பாக்கி ரக ஆயுதம் மற்றும் இரண்டு நவீன கையடக்கத் தொலைபேசிகளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

இந்த கையடக்கத் தொலைபேசிகள் மூலம் பாரியளவிலான தகவல்களை வெளிக்கொணர முடியும்.

இது தொடர்பில் எதிர்காலத்தில் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்யவுள்ளதாகவும் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால மேலும் தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டு. இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை உருவாக்குக!

## அரசிடம் சிறீநாத் எம். பி. கோரிக்கை

கொழும்பு, மார்ச் 20

**தொழிலின்மையால் இளைஞர், யுவதிகள் பல நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் வேலையில்லா பட்டதாரிகள் மற்றும் இளைஞர்களுக்கு தொழில் வாய்ப்புகளை உருவாக்கும் செயல்திட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இ. சிறீநாத் வலியுறுத்தினார்.**

பாராளுமன்றத்தில் அவர் ஆற்றிய உரையிலேயே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், வடக்கு, கிழக்கில் கடந்த கால யுத்தத்தில் இளை ஞர்கள் பல்வேறு திசைகளுக்கு சென்றிருந்தனர்.


யுத்தம் முடிவ டைந்த பின்னரும் அவர்களுக்கு வழிகாட்டல்கள் இல்லாமல், அவர்கள் வேலை வாய்ப்புகளுக் காக வெளிநாடுகளுக்கு செல் லும் நிலைமை உருவாகி யிருந்தது. இந்த நிலைமையை மாற்றியமைக்கும் பொறுப்பு இந்த அரசாங்கத்துக்கு உள்ளது.

வடக்கு, கிழக்கை பொறுத் தவரையில் இளைஞர்களின் விளையாட்டுத்துறை மற்றும் அவர்களுக்கான வேலை வாய்ப் புகள் எதிர்கால நிச்சயமற்ற நிலைமையில் இருந்தது. இந்நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு வகையான விளையாட்டு வீரர்கள் உருவாகியுள்ளனர். விளையாட்டுத்துறை அமைச் சின் ஊடாக மட்டக்களப்பு மாவட்டத்தில் விளையாட் டுத்துறையை ஊக்குவிக்கும் பெரும் பொறுப்பு உள்ளது.

வாகரை, செங்கலடி, களுவாஞ்சிக்குடி, வாழைச் சேனை உள்ளிட்ட பிரதேசங் களில் திறமான மைதானங்கள் இல்லாமையினால் தரமற்ற மைதானங்களில் திறமைகளை காட்ட வேண்டியுள்ளது. அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட கபடி அணி கேரளா வில் பாரிய வெற்றியை பெற் றுள்ளது.

இவை ஊக்குவிக் கப்பட வேண்டும். இந்த மாவட்டத் தில் 5 விளையாட்டு பயிற்று விப்பாளர்களுக்கு பற்றாக் குறைகள் காணப்படுகி றது - என் றார். (ஐ)

# கல்முனை சுகாதார சேவை பணிமனையில் இப்தார்



கல்முனை, மார்ச் 20

கல்முனை பிராந்திய சுகா தார சேவைகள் பணிம னையின் வருடாந்த இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்து வர் திரு மதி சகீலா இஸ்ஸதீன் தலைமை யில் நடைபெற்றது.

பிராந்திய கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு பிரிவின் பொறுப்பு மருத்துவ அதிகாரி மருத்துவர் எம்.சீ.எம்.மாஹிர் வரவேற்புரையுடன் ஆரம்ப மான இந்நிகழ்வில் கல்முனை நகர ஜம்ஆ பெரிய பள்ளிவா சல் பிரதம கதீப் அஷ்ஷேஹ் அல்-ஹாபிழ் எம்.எச்.எம்.இர்பாத் (ரஷாதி) மார்க்க சொற்பொழிவு நிகழ்த்தினார்.

இந்த இப்தார் நிகழ்வில் பிராந்திய பிரிவுத் தலைவர்கள், பணிமனையின் உத்தியோகத் தர்கள், ஊழியர் கள் எனப் பல ரும் கலந்துகொண்டனர். (ஐ)

# ஆலயம் உடைக்கப்பட்டு சிலைகள், பணம் திருட்டு

## முறையிட்டும் நடவடிக்கை இல்லை

மட்டக்களப்பு, மார்ச் 20

ஏறாவூர் நாகலிங்கேஸ்வரர் ஆலயம் உடைக்கப்பட்டு அங் கிருந்த சிலைகள் மற்றும் உண் டியல் பணம் என்பன களவா டப்பட்டன.

இந்த ஆலயம் புனரமைக் கப்பட்டு வருகிறது. இதனால், தற்காலிக மூலஸ்தானத்தில் ஆலயத்தின் விக்கிரகங்கள் மற்றும் பூசைப் பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்த மூலஸ்தானம் உடைக்கப்பட்டு சிலைகள் திருடப்பட்டன. அத்துடன், அங்கிருந்த உண்டியலும் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை இடம் பெற்ற இந்தத் திருட்டுச் சம்ப வம் தொடர்பில் சி. சி. ரீ. வி. கமெராவில் பதிவாகியுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் ஆலய நிர்வாகம் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்த போதிலும் பொலி ஸார் இதுவரை எந்த நடவடிக் கையையும் எடுக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வலைபந்தாட்ட போட்டியில் மண்முனை வடக்கு சம்பியன்!

மட்டக்களப்பு, மார்ச் 20

மாவட்ட செயலகம், பிரதேச செயலகங்களுக்கு இடையிலான வலைபந்தாட்ட போட்டியில் மண்முனை வடக்கு பிரதேச செயலகம் சம்பியனானது.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தால் நடத்தப்பட்ட இந்த சுற்றுப் போட்டி நடத்தப்பட்டது.

வெற்றி பெற்ற அணியினர் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் சிவப்பிரியா



வில்வரெத்தினம் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத் தர்களால் வரவேற்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். (ஐ)

# வவுணதீவு செயலகம் முன் விவசாயிகள் போராட்டம்!




மட்டக்களப்பு, மார்ச் 20

கண்டியனாறு, அடைச்சகல் குளங்களைப் புனரமைக் குமாறும் வருடாவருடம் ஒதுக்கப்படும் 3 ஆயிரம் கோடி ரூபாய்க்கு நிரந்தரமாக விவசாய வாய்க்கால்களை புனரமைக்கு மாறு வலியுறுத்தி விவசாயிகள் வவுணதீவு பிரதேச செயலகத் தின் முன்னால் நேற்றுமுன் தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச விவசாய அமைப் புகளின் அழைப்பின்பேரில் இந்தப் போராட்டம் முன்னெ டுக்கப்பட்டது.

இதனையடுத்து மாகாண நீர்ப்பாசன திணைக்களமே வெளிப்படையாக வேலைக ளைச் செய், கண்டியனாறு திட்டத்தை கைவிடப்பட்டதா? அரசாங்கத்தின் நிதியினை பசளை மானியம் நஷ்டஈடு என விரயம் செய்யவா அரச அதிகா ரிகள்? ஏன் எமது இளைஞர் யுவதிகள் வெளிநாடு செல்ல வேண்டும்,

மாகாண நீர்ப்பாசன திணைக்களமே? ஊப்பாற்றில் வீணாகச் செல்லும் நீரை விவ சாயத்திற்குப் பயன்படுத்தத் திட்டங்களைத் தீட்டு, 1600 ஏக்கர் விவசாய காணி 4000 ஏக்கர் மேட்டுக்காணிகளுக்கு நீர் வழங்குவதற்கு ஏன் தயக்கம், போன்ற வாசகங்களை ஏந்திய வாறு சுமார் ஒருமணிநேரம் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் பின்னர் அவர்கள் அங்கி ருந்து கலைந்து சென்றனர். (ஐ)

# யானை தாக்கி ஒருவர் மரணம்!

அம்பாறை, மார்ச் 20

காட்டுயானை தாக்கிய தில் மூன்று பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந் தார்.

நேற்று புதன்கிழமை அதிகாலை 3.30 மணியள வில் அம்பாறை, தமண பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது.

கல் ஓயா தோட்டத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற் றுள்ளது. கரும்புத் தோட் டத்துக்குள் நுழையும் காட்டு யானைகளை விரட்டுவதற்காக தோட்ட நிறுவனம் தொழிலா ளர்களை இரவு கண்கா ணிப்பில் அமர்த்தியது. இவ்வாறு கண் காணிப்பில் இருத்தப்பட்ட ஊழியரே யானை தாக்கி உயிரி ழந்தார்.

இதில் 39 வயதான கோசல குமார என்ற 3 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தார். (ஐ)

# கல்முனை ஸாஹிரா கல்லூரியில் இப்தார்!



கல்முனை, மார்ச் 20

கல்முனை ஸாஹிரா கல்லூ ரியின் வருடாந்த இப்தார் நிகழ்வு கல்லூரியின் கலாசார குழுவின் ஏற்பாட்டில் கல்லூ ரின் முதல்வர் எம். ஐ. ஜாபிர் தலைமையில் நடைபெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த இந்த நிகழ்வில் கல் முனை வலயக் கல்விப் பணிப் பாளர் எம். எஸ். சஹ்துல் நஜீம், கல்முனை தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். பக்கீர் றம்ஸீன், கல்முனை கல்வி வலய கணக்காளர் கே. லிங் கேஸ்வரன், கல்முனை மாநகர சபை பொறியியலாளர் ஜெளஸி அப்துல் ஜப்பார், கோட்டக் கல்விப் பணிப்பாளர் அஸ்மா அப்துல் மலிக் எனப் பலர் பங்கேற்றனர்.

இப்தார் சிந்தனையை இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் கல்முனை பிரிவு தலைவர் அஷ்ஷெய்க். முர்ஷித் முப்தி ( ஸஃதி, நஜ்மி ) நிகழ்த் தினார். பின்னர் வலயக் கல்விப் பணிப்பாளரின் விசேட உரை, இரா போசனத்துடன் இப்தார் நிகழ்வு நிறைவு பெற்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனிதா வில்லியம்ஸ் குழுவினர் பாதுகாப்பாக பூமி திரும்பினர்!



புளோரிடா, மார்ச் 20

**286 நாட்களை விண்வெளியில் கழித்துவிட்டு பூமிக்குத் திரும்பியுள்ளனர் இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், அமெரிக்க விண்வெளி வீரர் பெரி வில்மோர் உள்ளிட்ட நால்வர்.**

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலம் மூலம் இவர்கள் பாதுகாப்பாகப் பூமிக்குத் திரும்பினர்.

இலங்கை நேரப்படி புதன்கிழமை அதிகாலை 3.27 மணிக்கு புளோரிடா கடலில் டிராகன் விண்கலம் வெற்றிகரமாக இறங்கியது.

**9 மாதங்கள் விண்வெளியில்...!**

கடந்த ஆண்டு ஜூன் 5ஆம் திகதி அமெரிக்காவின் போயிங் நிறுவனம் தயாரித்த ஸ்ரார்லைனர் என்ற புதிய விண்கலத்தில் சுனிதா வில்லியம்ஸ், பேரி வில்மோர் ஆகியோர் சர்வதேச விண்வெளி நிலையத்துக்குச் சென்றனர். அவர்களின் திட்டம் 8 நாட்கள் அங்கிருந்து ஆய்வுகளை மேற்கொள்வது. ஆனால், ஸ்ரார்லைனரில் தொழில்நுட்பக் கோளாறு ஏற்படவே சுனிதா, வில்மோர் அங்கேயே தங்கும் நிலை ஏற்பட்டது. இதனால், 8 நாட்கள் பயணம் 9 மாதங்களாகின.

இதனால்தான். இந்த 286 நாட்களில் சுனிதாவும், வில்மோரும் விண்வெளியில் 121 மில்லியன் ஸ்டாட்யூட் மைல் பயணித்துள்ளனர். (ஒரு ஸ்டாட்யூட் மைல் என்பது சுமார் 5,280 அடி)

**எலான் குற்றச்சாட்டு**


இந்நிலையில் எலான் மஸ்க், முந்தைய பைடன் அரசு சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட குழுவினரை மீட்க எந்தவித நடவடிக்கையும் முறையாக எடுக்கவில்லை என்ற அரசியல் ரீதியான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். ஆனால், அதற்கான ஆதாரங்கள் எதையும் அவர் கூறவில்லை.

**வெள்ளை மாளிகை வரவேற்பு**

ஸ்பேஸ் எக்ஸ், நாசா இணைந்து விண்வெளி வீரர்களை பாதுகாப்பாக பூமிக்கு அழைத்து வந்த நிலையில் வெள்ளை மாளிகை எக்ஸ் தளத்தில் பகிர்ந்த பதிவில், "வாக்குறுதி அளித்தார். அதை நிறைவேற்றினார். 9 மாதங்களாக விண்வெளியில் சிக்கிக் கொண்ட வீரர்களை ட்ரம்ப் பத்திரமாக மீட்டுக் கொண்டு வந்துள்ளார். நாசா, ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனங்களுக்கும் எலான் மஸ்குக்கும் நன்றி." என்று குறிப்பிட்டுள்ளது.

**அடுத்த 45 நாட்கள்...**

தொடர்ச்சியாக பல மாதங்கள் விண்வெளியில் தங்கியிருந்தமையால் கை, கால் செயல்பாடுகளில் சிரமம், தலை சுற்றல், தசை சிதைவு உள்ளிட்ட பல்வேறு உபாதைகளுக்கு விண்வெளி வீரர்கள் ஆளாகக்கூடும். இதனால், சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட 4 பேரும் ஹூஸ்டனில் உள்ள நாசா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இன்னும் ஓரிரு தினங்களில் குடும்பத்தினரை சந்திக்க அவர்கள் அனுமதிக்கப்படுவர். அதன் பின்னர் 45 நாட்கள் வரை அந்த மருத்துவமனையிலேயே தங்கி மறுவாழ்வு சிகிச்சைகளை பெறுவர். (ஐ)



இந்தியாவில் அவுரங்கசீப் சமாதியை அகற்ற போராட்டம்:

# கலவரமாக மாறியதால் 50பேருக்கும் மேல் கைது

நாக்பூர், மார்ச் 20

இந்தியாவின் மகாராஷ்டிராவில் முகலாய மன்னர் அவுரங்கசீப் சமாதியை அகற்றக் கோரி நடத்தப்பட்ட போராட்டம் வன்முறையாக மாறியது.

இந்த சம்பவம் தொடர்பில் 50இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர். இது திட்டமிட்ட சதி என முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ் குற்றம் சாட்டினார்.

மராட்டிய மன்னர் சத்ரபதி சிவாஜியின் மகன் சம்பாஜியின் வரலாறு 'சவ்வா' என்ற பெயரில் திரைப்படமாக ஹிந்தி மொழியில் சமீபத்தில் வெளியானது. இந்நிலையில், மகாராஷ்டிர சட்டப் பேரவையின் பட்ஜெட் கூட்டத்தொடரில், சமாஜ்வாதி எம்எல்ஏ அபு ஆஸ்மி, முகலாய மன்னர் அவுரங்கசீப்பை பாராட்டி கோஷமிட்டது சர்ச்சையானது.

இதனிடையே, சத்ரபதி சம்பாஜி நகரில் (அவுரங்காபாத்) உள்ள அவுரங்கசீப் சமாதியை அகற்ற வேண்டும் என்று இந்து அமைப்புகள் மீண்டும் போர்க் கொடி தூக்கின. இது தொடர்பாக விஸ்வ இந்து பரிஷத் (விஎச்பி), பஜ்ரங்தளம் உள்ளிட்ட இந்து அமைப்புகள் சார்பில் கடந்த திங்கட்கிழமை மாநிலம் தழுவிய போராட்டம் நடைபெற்றது.

இதன் ஒரு பகுதியாக நாக்பூரின் மஹல் பகுதியில் உள்ள சிவாஜி சிலை அருகே போராட்டம் நடைபெற்றது. அப்போது, சம்பாஜி நகரில் உள்ள அவுரங்கசீப் சமாதியை அகற்ற வேண்டும் என கோஷம் எழுப்பினர். மேலும் அவுரங்கசீப்பின் உருவப்படத்தை எரித்தனர். இதில் மத நூலும் எரிக்கப்பட்டதாக வதந்தி பரவியது. இதுதவிர மேலும் சில வதந்திகள் பரவின.

இதையடுத்து, நாக்பூரின் ஹன்சபுரி பகுதிக்குள் நுழைந்த ஒரு குழுவினர் அங்கிருந்த வீடுகள் மற்றும் கடைகள்மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தியது. வாகனங்களுக்கும் தீ வைத்தது. எனினும் பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதேசமயம், நாக்பூரில் கலவரம் பாதித்த பகுதியில் படையினர் குவிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், அந்தப் பகுதிகளில் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)



# ஹொண்டூரேஸில் விமான விபத்து 12 பேர் உயிரிழப்பு ஐவர் மீட்பு!

ஹொண்டூரஸ், மார்ச் 20

ஹொண்டூரஸ் நாட்டில் இடம்பெற்ற விமான விபத்தில் 12 பேர் உயிரிழந்தனர். 5 பேர் படுகாயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

ரோவாடன் தீவில் இருந்து லான்சா எயார்லைன்ஸின் சிறிய ரக வர்த்தக விமானம் ஒன்று 17 பயணிகளுடன் கடந்த திங்கட்கிழமை இரவு புறப்பட்டது. அந்த விமானம் லா சீபா நகர் நோக்கி சென்று கொண்டிருந்தது.

இந்நிலையில், விமானம் திடீரென விபத்தில் சிக்கி கடலில் விழுந்தது. இதனை பார்த்த மீனவர்கள் சிலர் உடனடியாக கடலில் விழுந்தவர்களை மீட்டனர். ஐவர் உயிருடன் மீட்கப்பட்டனர். 12 பேரின் சடலங்களே மீட்கப்பட்டன.

விமானம் முழு உயரத்துக்கு செல்ல முடியாமல், விபத்தில் சிக்கி கடலுக்குள் மூழ்கியதாக விசாரணைகளில் தெரிய வந்தது.

இந்த விபத்தில் பிரபல இசையமைப்பாளர் ஆரெலியோ மார்டினெஜ் சுவாஜோவும் பலியானார். ஐரோப்பிய, அமெரிக்காவிலும் இவரின் இசைக்கு அதிக ரசிகர்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காஸா தாக்குதலில் 413 பேர் பலி

காஸா, மார்ச் 20

காஸாமீதான இஸ்ரேலின் "கொடிய" வான்வழித் தாக்குதல்களுக்கு அமெரிக்காவின் வரம்பற்ற அரசியல் மற்றும் இராணுவ ஆதரவே காரணம் என்று ஹமாஸ் குற்றம் சாட்டியுள்ளது. இந்தத் தாக்குதலில் குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெண்கள் உட்பட 413 பேர் கொல்லப்பட்டனர் என்றும் தெரிய வருகின்றது.

பணய கைதிகள் விடுவிக்கப்படுவதை ஹமாஸ் வேண்டுமென்றே தாமதப்படுத்துகிறது. அமெரிக்கா மற்றும் மத்தியஸ்த நாடுகளின் ஆலோசனைகள் புறக்கணிக்கப்படுகின்றன என்று சாடிய இஸ்ரேல் காஸா மீது மீண்டும் தாக்குதலை தொடர்ந்தது. இதிலேயே, குழந்தைகள், சிறுவர்கள் மற்றும் பெண்கள் உட்பட 413 பேர் உயிரிழந்தனர். (ஐ)



# உக்ரைனின் எரிசக்தி கட்டமைப்பை 30 நாட்களுக்கு தாக்க மாட்டோம்!

## ட்ரம்பிடம் புடின் உறுதி



வாஷிங்டன், மார்ச் 20

30 நாட்களுக்கு உக்ரைன் பகுதியில் உள்ள எரிசக்தி கட்டமைப்புகள்மீது தாக்குதல் நடத்தப்படாது என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் போர் நிறுத்தப் பேச்சை முன்னெடுத்த அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பிடம் உறுதியளித்துள்ளார்.

3 வருடங்களாக நீடிக்கும் உக்ரைன் - ரஷ்ய போரை முடிவுக்குக் கொண்டுவருவது தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி புடின் ஆகியோர் பேச்சு நடத்தினர்.

இதன் விளைவாக 30 நாட்களுக்கு உக்ரைன் பகுதியில் உள்ள எரிசக்தி கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தப்படாது என்று புதின் உறுதியளித்துள்ளார்.

கடந்த 2022 பெப்ரவரி மாதம் உக்ரைன்மீது ரஷ்யா போர் தொடுத்தது. உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்ததுடன், ஆயுத உதவியும் வழங்கின.

இந்தப் போரை நிறுத்த ட்ரம்ப் புடினுடன் பேச்சு நடத்தினார். இதன்போது உக்ரைனை போன்று 30 நாட்கள் போர் நிறுத்தத்துக்கு ரஷ்யாவை இணங்க வைக்க ட்ரம்ப் முயன்றார். ஆனால், போர் நிறுத்தத்தை புடின் முழுமையாக ஏற்கவில்லை.

மாறாக 30 நாட்க ளுக்கு உக்ரைனின் எரிசக்தி கட்டமைப்புகளைக் குறிவைத்து நடத்தப்படும் தாக்குதல்கள் மட்டும் நடக்காது என்று கூறியுள்ளார்.

"30 நாட்கள் போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொண்டால் உக்ரைன் அந்த காலக்கட்டத்தைப் பயன்படுத்தி கூடுதல் படைகளை, ஆயுதங்களைக் குவிக்கும். தன்னை இராணுவ ரீதியாக பலப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளும். எங்களை போர் நிறுத்தத்துக்கு அழுத்துவதைக் காட்டிலும் உக்ரைனுக்கு வெளிநாடுகள் வழங்கிவரும் ஆயுத உதவிகள், உளவுத் தகவல்களை நிறுத்தினாலே போர் முடிவுக்கு வரும்." என்று புடின் கூறினார் என்று கூறப்படுகிறது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகக்கிண்ண தகுதி சுற்று:

# இரு போட்டிகளில் மெஸ்ஸி விலகல்!

புவனஸ்அயர்ஸ், மார்ச் 20

உலகக் கிண்ணத் தகுதிச் சுற்றில் உருகுவே, பிரேஸில் அணிகளுக்கு இடையிலான போட்டிகளிலிருந்து ஆர்ஜென்ரீனாவின் தலைவர் மெஸ்ஸி விலகியுள்ளார்.

உலகக் கிண்ண உதைபந்தாட்ட தகுதிச்சுற்று போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இதில், ஆர்ஜென்ரீனா அடுத்த இரண்டு போட்டிகளில் வருகிற 22ஆம் திகதி உருகுவே அணியையும் 26ஆம் திகதி பிரேசில் அணியையும் எதிர்கொள்கிறது.

இந்த இரண்டு போட்டிகளிலும் ஆர்ஜென்ரீனா அணியின் தலைவர் மெஸ்ஸி விளையாடவிருந்தார். ஆனால், காயம் காரணமாக உருகுவே, பிரேசில் ஆகிய இரண்டு அணிகளுக்கு எதிரான போட்டிகளில் இருந்து அவர் விலகியுள்ளார். இது ஆர்ஜென்ரீனா அணிக்கு பின்னடைவாகக் கருதப்படுகிறது. (ஐ)

# பஞ்சாப் அணிக்காக கிண்ணம் வெல்வேன்!

## ஸ்ரேயஸ் ஐயர்

பஞ்சாப், மார்ச் 20

பஞ்சாப் அணி இன்னும் ஐ. பி. எல். கிண்ணத்தை வெல்லவில்லை. அவர்களுக்கு கிண்ணத்தை வென்று கொடுப்பதுதான் என்னுடைய ஒரே இலக்கு என்று ஸ்ரேயஸ் ஐயர் தெரிவித்துள்ளார்.




விளையாட்டு தொலைக்காட்சி சனல் ஒன்றுக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இதனைத் தெரிவித் தார்.

மேலும், "ஏலத்தில் எடுக்கப்பட்ட தருணத்தில் இருந்தே, என்னுடைய இலக்கு ஒன்றே ஒன்றுதான். பஞ்சாப் அணி இன்னும் ஐ. பி. எல். கிண்ணத்தை வெல்லவில்லை. அவர்களுக்குக் கிண்ணத்தை வென்று கொடுப்பதுதான் என்னுடைய ஒரே இலக்கு. அது ஓர் இமாலய சாதனையாக இருக்கும், நான் ரசிகர்களை மகிழ்விக்க விரும்புகிறேன், அவர்களுக்கு கொண்டாடுவதற்காக ஒரு காரணத்தை கொடுக்க வேண்டும். தொடரின் முடிவில் ஒரு பஞ்சாபி கொண்டாட்டம் சிறப்பு வாய்ந்ததாக இருக்கும்.

அணியில் உள்ள அனைவருக்கும் அவரவர் பலம் தெரியும். மேலும் தலைமைப் பதவியைப் பெறுபவர், தான் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொள்வார். கூடுதல் கருத்துகளை பகிர்ந்து கொள்வது அர்த்தமற்றது. ஏனென்றால், ஒவ்வொரு நபரும் அவர வர் வழியில் ஒரு தலைவர்தான். இந்திய அணியில், நாங் கள் பொதுவாக ஐ. பி. எல். பற்றிப் பேசுவதில்லை. எங் கள் கவனம் எப்போதும் தேசிய அணியின் இலக்குக ளில்தான் இருக்கும். சில நேரங்களில் ஐ. பி. எல். விவா தங்கள் ஏலத்தைச் சுற்றி நடக்கும்" - என்றார். (ஐ)

# கோலி ஸ்மார்ட்டாக விளையாட வேண்டும்!

## ஏபி டி வில்லியர்ஸ்




கேப்டவுன், மார்ச் 20

விராட் கோலி அவரின் ஸ்ட்ரைக் ரேட்டை அதிகப் படுத்தத் தேவையில்லை. ஸ்மார்ட்டாக விளையாட வேண்டும் என்று ஏபி டி வில்லியர்ஸ் கருத்து தெரிவித் துள்ளார்.

மேலும், விராட் கோலி கிரிக்கெட்டை அனுபவித்து விளையாடுவதாக நினைக்கிறேன். அவர் பில் சால்ட்டு டன் விளையாடும்போது, அவரது ஸ்ட்ரைக் ரேட்டை அதிகப்படுத்த தேவையிருக்காது என நினைக்கிறேன். நாம் பார்த்ததிலேயே அதிரடியாக விளையாடக் கூடிய ஆட்டக்காரர்களில் ஒருவர் பில் சால்ட். விராட் கோலி யின் மீதான அழுத்தத்தை பில் சால்ட் எடுத்துவிடுவார் என நினைக்கிறேன்.

பல ஆண்டுகளாக விராட் கோலி கிரிக்கெட்டில் செய்து வருவதை தொடர்ந்தாலே போதுமானதாக இருக்கும். அவர் ஆட்டத்தை கட்டுப்பாட்டில் வைத்து புத்திசாலித்தனமாக வெளிப்படுத்தினால் போதும். அவருக்கு எப்போது நிதான ஆட்டத்தை வெளிப்படுத்த வேண்டும், எப்போது அதிரடியாக விளையாட வேண் டும் என்பது தெரியும்.

கடந்த சில தொடர்களாக விராட் கோலியின் துடுப் பாட்டம்மீது தேவையற்ற விமர்சனங்கள் முன்வைக் கப்படுகின்றன. வெளியிலிருந்து வரும் விமர்சனங்கள் அவரின் ஆட்டத்தில் சிறிதளவாவது தாக்கத்தை ஏற்ப டுத்தும் என்பதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை. அவ ரும் மனிதர்தான். அவரது மனதில் சில சந்தேகங்கள் எழுந்திருக்கலாம். ஆனால், விராட் கோலி எப்போதும் அணிக்காக சிறப்பாக செயல்பட்டுள்ளார். முக்கியமான தருணங்களில் அணிக்காக சிறப்பாக செயல்பட்டு வெற்றி பெற்றுத் தந்துள்ளார் - என்றும் கூறினார். (ஐ)


# பாகிஸ்தான் வீரர் ஜமாலுக்கு 13 இலட்சம் ரூபாய் அபராதம்

இஸ்லாமாபாத், மார்ச் 20

பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் அமீர் ஜமாலுக்கு அந்த நாட்டு கிரிக்கெட் சபை 14 இலட்சம் ரூபாய் (நம் நாட்டு மதிப்பில் சுமார் 13 இலட்சம் ரூபாய்) அபராதம் விதித்துள்ளது.

அவர் தனது டெஸ்ட் தொப்பில் "804" என்ற எண்ணை எழுதியதற்காகவே இந்த அபராதம் விதிக்கப்பட் டுள்ளது.

முன்னதாக, கடந்த ஆண்டு ஒக்ரோபரில் இங்கிலாந் துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின்போது, அமீர் ஜமால் 804 என்ற நம்பர் எழுதியிருந்த தொப்பியை அணிந்தி ருந்தார். இந்த 804 என்ற எண்ணானது, சிறையிலிருக்கும் பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும், பாகிஸ்தானுக்கு ஒரு நாள் உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த முன்னாள் தலைவருமான இம்ரான் கானின் கைதி இலக்கமாகும். இதனால், கிரிக்கெட்டில் அரசியலைக் கொண்டு வந்து இம்ரான் கானை ஆதரித்தமைக்காக அமீர் ஜமாலுக்குப் பாகிஸ்தான் இந்த அபராதத்தை விதித்துள்ளது. (ஐ)




Aamir Jamal's '804' sparks controversy at PAKvsENG test



மியாமி ரென்னிஸ் தொடர்

# நயோமி ஒசாகா அடுத்த சுற்றில்!

புளோரிடா, மார்ச் 20

மியாமி ஓப்பன் ரென் னிஸ் தொடரில் ஜப்பானின் நயோமி ஒசாகா இரண்டா வது சுற்றுக்கு முன்னேறி யுள்ளார்.

மியாமி ஓப்பன் சர்வ தேச ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நேற்று முன்தினம் ஆரம்பமானது.

இதில் மகளிர் ஒற்றையர் பிரிவின் முதலாவது சுற்று ஆட்டம் ஒன்றில் ஜப்பா னின் நயோமி ஒசாகா, உக்ரைனின் யூலியா ஸ்டா ரோப்ட்சேவாவுடன் மோதி னார்.

விறுவிறுப்பாக நடை பெற்ற இந்தப் போட்டியில் 3-6, 6-4, 6-3 என்ற செற் கணக்கில் வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார் ஒசாகா. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசபந்து...

தாக்கல் செய்திருந்தார். ஆனால், இந்த மனுவை கடந்த திங்கட் கிழமை நீதிமன்றம் நிராகரித்தது.

இந்த நிலையில், நேற்று புதன்கிழமை காலை மாத்தறை நீதிவான் நீதிமன்றில் சரணடைந்தார். சரணடைந்த தென்னக்கோன் நீதிவானின் உத்தரவுக்கு அமைய இன்று வியாழக்கிழமை வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். தென்னக்கோன் அங்குனுகொல பெலஸ்ஸ சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். (ஐ)

## த.வி.கூட்டணி...

இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"தவிர்க்க முடியாத காரணங்களால் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிட கட்சியால் நியமன பத்திரங்களை தாக்கல் செய்ய முடியவில்லை", என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

## யாழ்ப்பாண...

துணைவேந்தர் அழைத்து வரப்பட்டார். இதைத் தொடர்ந்து அவர் அமர்வுகளுக்கு தலைமை தாங்கிப் பட்டங்களையும், பரிசில்கள், தகைமை சான்றிதழ்களையும் வழங்கினார்.

நேற்று புதன்கிழமை ஆரம்பமான இந்தப் பட்டமளிப்பு விழா 13 அமர்வுகளாக நாளை மறுதினம் சனிக்கிழமை வரை நடைபெறவுள்ளது. இதில், 3 ஆயி ரத்து 920 மாணவர்கள் பட்டங்களை பெறவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

(படங்கள் பக்கம் 2இல்)

## மன்னம்பேரி...

தற்போது, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் சர்வதேச நேர் காணலால் பேசுபொருளாகியுள்ளது.

இந்தப் படுகொலைகள் தொடர்பாக, அக்காலப்பகுதியில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அறிக்கை ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை வரை சமர்ப்பித்திருந்தார். ஆனால், அப்போதும் இதற்கான தீர்வுகள் எட்டப்படவில்லை. சந்திரிகா காலத்திலும் கண்டுகொள்ளப்படாத இந்த விடயம் தற்போது, கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருப்பது நியாயபூர்வமானது.

அந்தவகையில், கதிர்காமத்து அழகி மன்னம்பேரி, சொந்த சகோதரர்களான இராணுவத்தினரால் ஆடைகள் களையப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். இது உலக வரலாற்றிலேயே மிக கேவலமான ஒரு பதிவு. இவ்வாறான நிலையில் அதற்கு நீதி பல காலமாக கோரப்பட்டு வருகின்றது.

இதேபோல, தமிழ் தேசிய இனம் சார்ந்த இசைப்பிரியா மற்றும் கிருஷாந்தி போன்றவர்கள் பாலியல் கொடுமைகளுக்கு பின்னர் இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டார்கள். அவர்களுக்கான நீதி விசாரணைகளை நாங்கள் பல இடங்களில் கோருகிறோம்.

தமிழர்களுக்கு நடந்தது மிகப்பெரிய இனப்படுகொலை. ஆனால், சிங்கள மக்களின் எழுச்சி, கிளர்ச்சிகளுக்கு எதிராக இந்த வதைமுகாம்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன - என்றார்.

**யார் இந்த மன்னம்பேரி?**

பிரேமாவதி மன்னம்பேரி கதிர்காமத்தை சேர்ந்தவர். கதிர்காமத்து அழகி என் அறியப்பட்ட மன்னம்பேரி 1970களில் ஜே. வி. பியின் தீவிர ஆதரவாளராக அறியப்பட்டவர். ஜே. வி. பியின் கோட்டையாக செயல்பட்ட கதிர்காமத்தை 1971 ஏப்ரலில் இராணுவம் கைப்பற்றியதைத் தொடர்ந்து மன்னம்பேரி கைது செய்யப்பட்டார். அவரை இரவு முழுவதும் வன்புணர்வுக்கு உள்ளாக்கி சித்திரவதை செய்த இராணுவத்தினர் மறுநாள் அவரை நிர்வாணமாக கதிர்காமம் புனித நகரின் வீதிகளில் அழைத்துச் சென்று மக்கள் முன்னிலையில் சுட்டுக் கொன்றனர். இந்த சம்பவத்தில் வேறு பல பெண்களும் கொல்லப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வேட்புமனு...

ஆட்சேபனைகளை சமர்ப்பிக்க முடியும்.

வேட்புமனுக்களை ஏற்கும் பணி கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியிருந்தது.

இதேசமயம், தேர்தலுக்கான கட்டுப் பணம் செலுத்தும் கால அவகாசம் நேற்று புதன்கிழமை நண்பகல் 12 மணியுடன் முடிவடைந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இலங்கை...

மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் நேற்றைய தினம் இலங்கை தமிழ் அரசுக் கட்சியினர் வேட்புமனுக்களை தாக்கல் செய்தனர். (ஐ)

## தென்னகோனின்...

அவர் மேற் கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

மேலும், "பல நாட்களாக தலைமறைவாக இருந்து பாதுகாப்பு துறையின் சிறப்புக் கவனத்தை ஈர்த்த தென்னகோன், மாத்தறை நீதிமன்றத்தில் சரணடைந்தார். நேற்று (நேற்று முன்தினம்) குற்றப் புலனாய்வு துறையைச் சேர்ந்த ஒரு குழு ஹோகந்தர பகுதியில் உள்ள தென்னகோனின் வீட்டை ஆய்வு செய்தது. அங்கு ஆயிரத்து 9 மதுபான போத்தல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதில் 795 வெளிநாட்டு மதுபான போத்தல்களாகும்.

"அத்துடன், அவரின் வீட்டிலிருந்து தென்னக்கோனுக்கு சொந்தமானது என்று கருதப்படும் பிஸ்டல் துப்பாக்கி ஒன்றும் நவீன கைபேசிகள் இரண்டும் அதிகாரிகளால் எடுக்கப்பட்டன. இந்த கைபேசிகள் மூலம் அதிகளவிலான தகவல்களை பெறமுடியும். எதிர்காலத்தில் இந்த விடயம் குறித்து நீதிமன்றங்களுக்கு அறிக்கை அளிக்கப்படும்", என்றும் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

## 11,081...

காலப்பகுதியில் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளில், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 27 குடும்பங்களும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 823 குடும்பங்களும் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் 796 குடும்பங்களும், யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 2 ஆயிரத்து 828 குடும்பங்களும் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவில் 342 குடும்பங்களும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 568 குடும்பங்களும் பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 730 குடும்பங்களும் வேலணைப் பிரதேச செயலாளர் பிரிவில் 456 குடும்பங்களும் நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரத்து 855 குடும்பங்களும் உடுவில் பிரதே செயலர் பிரிவில் ஆயிரத்து 176 குடும்பங்களும் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் 526 குடும்பங்களும் ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 256 குடும்பங்களும் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 589 குடும்பங்களும் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் இருந்து 109 குடும்பங்களுமாக 11 ஆயிரத்து 81 குடும்பங்கள் தமக்கு காணிகளை வழங்குமாறு யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தை கோரியுள்ளனர்.

இவற்றில், யாழ்ப்பாணம் பிரதேச செயலாளர் பிரிவில் 2 குடும்பங்களுக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் 38 குடும்பங்களுக்கும் வேலணை பிரதேச செயலாளர் பிரிவில் 22 குடும்பங்களுக்கும் தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 85 குடும்பங்களுக்கும் ஊர்காவற்துறை பிரதேச செயலாளர் பிரிவில் 26 குடும்பங்களுக்கும் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பிரிவில் 72 குடும்பங்களுக்குமாக352 குடும்பங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. 10 ஆயிரத்து 729 குடும்பங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# உள்ளூராட்சி தேர்தல் திகதி இன்று அறிவிக்கப்படலாம்?

கொழும்பு, மார்ச் 20

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் திகதி அநேகமாக இன்றைய தினம் அறிவிக்கப்படும் என்று தெரிய வருகிறது.

உள்ளூராட்சி சபைகள் தேர்தலுக்கான வேட்புமனுக்களை தாக்கல் செய்வதற்கான கால அவகாசம் இன்று வியாழக்கிழமை நண்பகலுடன் நிறைவடைகிறது. இந்தநிலையில், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் திகதி குறித்த அறிவிப்பு அநேகமாக இன்று அல்லது நாளை வெளியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தேர்தல் சட்ட விதிகளின்படி வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட தினத்திலிருந்து 35 முதல் 49 நாட்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதன் அடிப்படையில் எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதியின் பின்னர் தேர்தல் நடைபெற வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகின்றது. (ஐ)

# தமிழ் அரசுக்கு எதிராக சிவமோகன் தொடுத்த வழக்கில் இன்று உத்தரவு!

யாழ்ப்பாணம், மார்ச் 20

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்து தன்னை இடைநிறுத்தி கட்சியின் மத்திய குழு எடுத்த முடிவுக்கு இடைக்கால தடை கோரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தொடுத்த வழக்கில் உத்தரவு இன்று வியாழக்கிழமை வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி சதீஸ்கரன் முன்னிலையில் நேற்று முன்தினம் நடந்த வழக்கில் வாத பிரதிவாதங்கள் இடம்பெற்றிருந்தன.

இந்த நிலையில், இந்த வழக்கில் இடைக்காலக் கட்டளை தொடர்பான உத்தரவு இன்று வியாழக்கிழமை வழங்கப்படவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பணிப்புறக்கணிப்பை நியாயப்படுத்த முடியாது!

## சுகாதார நிபுணர்களிடம் ஜனாதிபதி காட்டம்!

கொழும்பு, மார்ச் 20

தொழிற்சங்கங்களின் கோரிக்கையோ அல்லது அழுத்தமோ இல்லாமல் அரசாங்கத்தால் மிகப்பெரிய சம்பள உயர்வு ஏற்கனவே செயல்படுத்தப்பட்டுள்ளது. இதனால், சுகாதார நிபுணர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளை நியாயப்படுத்த முடியாது - இவ்வாறு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற பொது சேவைகள் ஐக்கிய தாதியர் சங்கத்துடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வரையறுக்கப்பட்ட பொருளாதார கட்டமைப்புக்குள் செயல்பட்ட போதிலும், இந்த ஆண்டு வரவு - செலவு திட்டத்தில் பொதுத்துறை ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளது.

இந்த முயற்சி பொது சேவையின் செயல்திறனை மேம்படுத்துதல், திறமை



யான நிபுணர்களை ஈர்த்தல் மற்றும் துறையின் நிலைத்தன்மையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

வரவு - செலவு திட்டத்தில் 6 முக்கிய பிரிவுகளின் கீழ் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. அடிப்படை சம்பளத்தில் குறைந்தபட்சம் ரூ. 15 ஆயிரம் அதிகரிப்பு, கூடுதல் நேர மற்றும் விடுமுறை கொடுப்பனவுகளில் அதிகரிப்பு, சம்பள உயர்வுகளில் 80 வீதம் அதிகரிப்பு, திருத்தப்பட்ட மொத்த சம்பளத்துக்கு ஏற்ப ஓய்வூதிய சலுகைகளில் மேல் நோக்கிய திருத்தம் மற்றும் வரி விதிக்கக்கூடிய வருமான வரம்பில் அதிகரிப்பு ஆகியவை இதில் அடங்கும் என்றும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## தமிழ் அரசியல்...

செய்தியாளர் சந்திப்பிலேயே மேற் கண்டவாறு கூறினார்.

மேலும், "தூய்மையான அரசியலை முன்னெடுத்த ஒருவனாக நான் இருக்கின்றேன். தந்தை செல்வா, ஜீ. ஜீ. பொன்னம்பலம், தொண்டமான் ஆகியோர் உருவாக்கிய கட்சிதான் தமிழர் விடுதலைக் கூட்டணி. நாங்கள் நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடவில்லை. அதற்கான பணமும் எங்களிடம் இல்லை. நடைபெறவுள்ள தேர்தல்தான் முக்கியமான ஒரு தேர்தலாக அமையும்.

"இப்போது வெளியிடங்களில் இருந்து வந்து கோடிக்கணக்கில் பணத்தை கொட்டி இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறார்கள். என்னுடன் பேரம் பேசியதாகக்கூட சொல்கின்றார்கள். என்னிடம் இவ்வாறு தேர்தலில் வீசி எறிய பணம் இல்லை. ஆனால், அரசியலுக்காக இல்லாமல் அனைவருமே ஒன்று திரண்டு ஓரணியிலிருந்து தமிழ் மக்களின் பிரச்னை தீர்க்க முன் வர வேண்டும்" - என்றார். (ஐ)

## தமிழ் தேசிய...

தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன் னம்பலம் தலைமையில் இந்த வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப் பட்டன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கொள்கையளவில் இணக்கம் கண்ட கட்சிகளுடன் கூட்டணியாக அதன் தாய்க் கட்சியான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சின்னத்தில் வடக்கு, கிழக்கு முழுவதும் போட்டியிடுகிறது என்பது குறிப்பிடத்தக்து.

இதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நேற்றைய தினம் வவுனியா மாவட்டத்திலும் வேட்புமனுக்களை தாக்கல் செய்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## மகிந்த தாக்கல் செய்த மனு விசாரணையின்றி நிராகரிப்பு!

கொழும்பு, மார்ச் 20

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது பாதுகாப்பு அதிகாரிகளைக் குறைத்தமைக்கு எதிராகத் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை விசாரணையின்றி உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருந்த அதிகாரிகளில் 60 பேரை அண்மையில் அரசாங்கம் நீக்குவதற்குத் தீர்மானித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த மனுவில் உள்ள விவரங்களை நீண்ட நேரம் ஆய்வு செய்த பின்னரே உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது. (அ)

## தீர்வு இன்றேல் நாடளாவிய ரீதியில் பெரும் தொழிற்சங்க நடவடிக்கை!

### சுகாதார நிபுணர்கள் கூட்டமைப்பு

கொழும்பு, மார்ச் 20

**தங்களது பிரச்னைகளுக்குரிய தீர்வு கிடைக்கவில்லையாயின் சகல சுகாதார தொழிற்சங்கங்களையும் இணைத்துக்கொண்டு நாடளாவிய ரீதியில் பெரும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவேண்டிய நிலை ஏற்படும் என சுகாதார நிபுணர்கள் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.**

சுகாதார தொழில் வல்லுநர்களின் ஒன்றியத்தினால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட அடையாளப் பணிப்புறக்கணிப்பு நேற்று காலை 7 மணியுடன் நிறைவடைந்தது.

இந்த பணிப்புறக்கணிப்பு காரணமாக நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளானதாக தெரிவிக்கப்பட்டது.

பாதீட்டின் ஊடாக தங்களுக்கான கொடுப்பனவுகளை குறைப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் உள்ளிட்ட விடயங்களுக்கு தீர்வு கோரி 18 சுகாதார தொழிற்சங்கங்கள் நேற்று முன் தினம் காலை 7 மணி முதல் அடையாள பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டன.

கலந்துரையாடல் மூலம் தங்களது பிரச்னைகளைப் பேசித் தீர்க்க முற்பட்ட போதிலும் அதற்குரிய தீர்வு கிடைக்கவில்லை எனச் சுகாதார நிபுணர்கள் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் தங்களது பிரச்னைகளுக்குரிய தீர்வு கிடைக்கவில்லையாயின் சகல சுகாதார தொழிற் சங்கங்களையும் இணைத்துக்கொண்டு நாடளாவிய ரீதி யில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

## அர்ச்சுனாவின் பாராளுமன்ற உரையை ஒலி, ஒளிபரப்ப தற்காலிகமாகத் தடை!

கொழும்பு, மார்ச் 20

பாராளுமன்றஉறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் பாராளுமன்ற உரையை இன்று முதல் மேமாதம் 8 ஆம் திகதி வரை ஒளிபரப்ப தற்காலிகமாக தடை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் கலாநிதி ஜகத் விக்ரமரத்ன அறிவித்துள்ளார்.

பாராளுமன்றம் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று கூடியது . இதன்போதே குறித்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா பாராளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்திக் கொண்டு பாராளுமன்றத்திற்கு வெளியில் உள்ள தனிநபர்கள் மற்றும் குழுக்களை சமூக ஊடகத்தை பயன்படுத்தி விமர்சிப்பதான முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. அதேபோன்றுஅவர் பெண்களை மிக கீழ்த்தரமாக விமர்சித்துள்ளார். இது பாராளுமன்ற கௌரவத்தை அவமதிப்பதாகும் செயற்பாடாகும்.

பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் செயற்பாடுகள் மற்றும் வார்த்தைகள் தேசிய நல்லிணக்கத்துக்கும், இன சகவாழ்வுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளன. இதற்கு நான் கடும் அதிருப்தியை வெளிப்படுத்துகிறேன் .

இந்த விடயம் தொடர்பில் அவருக்கு தொடர்ச்சியாக எச்சரித்தபோதிலும் அவர் அதற்கு மதிப்பளிக்காது செயற்பட்டுள்ளமையே புலனாகின்றது. இது பாராளுமன்ற சம்பிரதாயத்தை மீறும் வகையிலும் அமைந்துள்ளது.

ஆகவே அர்ச்சுனா எம்.பி 20,21 மற்றும் ஏப்ரல் மாதம் 8,9,10 ஆம் திகதி மற்றும் மே மாதம் 6,7,8 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் ஆற்றும் உரையை நேரடியாக ஒளிப்பரப்பு செய்வதற்கு தடை விதிப்பதுடன், பாராளுமன்ற உரையை அவர் சமூகவலைத்தளங்களில் பதிவிடக் கூடாது எனவும் தெரிவித்துக் கொள்ளவிரும்புகின்றேன்.

இதுவரை காலமும் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரையில் பயன்படுத்தியுள்ள சர்ச்சைக்குரிய வார்த்தைகள் அனைத்தையும் ஹன்சாட் பதிவில் இருந்து நீக்குமாறும் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்த விடயத்தை அவர் எவ்வாறு கையாள்கின்றார் என்பதற்கு அமையவே அவருக்கு எதிரான தற்காலிக தடையை நீக்குவதா இல்லையா என்ற தீர்மானம் எடுக்கப்படும்-என்றார். (அ)

## பிரதமர் நரேந்திர மோடி இலங்கை செல்லக்கூடாது

### வைகோ கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 20

இலங்கை கடற்படை இந்திய மீனவர்கள் மீது தொடர் தாக்குதல்களை நடத்தி வரும் நிலையில் பிரதமர் நரேந்திர மோடி அந்த நாட்டுக்குச் செல்லக்கூடாது என மாநிலங்களவையில் வைகோ வலியுறுத் தினார்.

இது தொடர்பாக மாநிலங்களவையில் பேசிய வைகோ-கடந்த 40 ஆண்டுகளில் 843 மீனவர்கள் இலங்கை கடற்படையால் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார்கள்.

ஜனவரி 25ஆம் திகதி முதல் 45 நாட்களில் பல்வேறு தாக்குதல்களை இலங்கைக் கடற்படை நடத்தி இருக்கிறது.

ஜனவரி 25 அன்று 3 படகுகளில் இராமேஸ்வரத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 34 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்தது. எல்லை தாண்டி மீன் பிடித்ததாக அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் அவர்கள் அடைக்கப்பட்டனர்.

பின்னர் அவர்கள் கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு லட்சக்கணக்காண ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

பெப்ரவரி 2ஆம் திகதி ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் ஏராளமான படகுகளில் மீன் பிடிக்கச் சென்றனர். அவர்களில் 10 மீனவர்களை இலங்கைக் கடற்படை கைது செய்து அவர்களின் படகையும் பறிமுதல் செய்தது.

பெப். 19ஆம் திகதி இலங்கை கடற்படை 42 இந்திய மீனவர்களை கைது செய்தது.இலங்கை கடற்படையின் மனித நேயமற்ற இத்தகைய நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நமது மீன்படி தொழிலை அழிக்க இலங்கைக் கடற்படை விரும்புகிறது. நமது கடற்படை அங்கே என்ன செய்து கொண்டிருக்கிறது? நாங்கள் இந்திய அரசுக்கு வரி செலுத்துகிறோம்.

தமிழக மீனவர்கள் என்ன அநாதைகளா?நமது நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கைக்குச் சென்று அந்நாட்டின் ஆட்சியாளர் களைச் சந்தித்தார். நமது வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கரும் அதேபோல் சந்தித்தார். ஆனால் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை.

தற்போது என்ன காரணத்துக்காக நமது பிரதமர் நரேந்திர மோடி இலங்கை செல்கிறார்? இலங்கை அரசுக்கும் அதன் கடற்படைக்கும் கண்டனம் தெரிவிக்கப் போகிறாரா? இன்றும்கூட இராமேஸ்வரம் தங்கச்சிமடம் பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மீனர்கள் இந்திய அரசிடம் நீதி கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் பிரதமரை சந்தித்து இது தொடர்பாக பேசி இருக்கிறார். வெளியுறவு அமைச்சரையும் சந்தித்துப் பேசி இருக்கிறார். பலமுறை கடிதம் எழுதி இருக்கிறார்.

அவை அனைத்துமே குப்பைத் தொட்டியில் போடப்பட்டுவிட்டன .

இதுதான் இந்திய அரசு தமிழக மீனவர்களை இந்திய குடிமக்களை நடத்தும் விதமா? இனிமேலாவது நீங்கள் அங்கே செல்லாதீர்கள். அவர்களை இங்கே வரவழையுங்கள் - என்றார். (அ)

## வெலிகந்தைப் பொலிஸ் நிலைய முன்னாள் பொறுப்பதிகாரியை கைது செய்ய உத்தரவு

கொழும்பு, மார்ச் 20

வெலிகந்தை பொலிஸ் நிலையத்தின் முன்னாள் பொறுப்பதிகாரியைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு பொலனறுவை நீதவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சில மாதங்களுக்கு முன்பு வெலிகந்தை பொலிஸார் 20 பசுக்களுடன் இரண்டு சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்திய சம்பவம் தொடர்பிலேயே குறித்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வெளிநாடு செல்வதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக முன்னாள் வெலிகந்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு எதிராக அநாமதேய மனு தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து, நீதவான் இந்த விடயத்தை நேரில் விசாரித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபர் மற்றும் வடமத்திய மாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகரிடம் நீதவான் ஒப்படைத்துள்ளார்.

இந்த சம்பவத்தில் தொடர்புடைய இரண்டு சந்தேக நபர்கள் கடந்த 18 ஆம் திகதி பொலிஸாரால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர்.

வழக்கின் முக்கிய சந்தேக நபரான வெலிகந்தை முன்னாள் பொலிஸ் அதிகாரி தலைமறைவாக இருப்பதாக, வடமத்திய மாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்த வழக்கின் முக்கிய சந்தேக நபருக்கு எதிராக பிடியாணை பிறப்பித்து, அவரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு பொலனறுவை நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது. (அ)

## கைதான இந்திய மீனவர்களில் இருவருக்கு ஆறு மாதச் சிறை!

### 4 பேர் நிபந்தனையுடன் விடுதலை

யாழ்ப்பாணம், மார்ச் 20

கடந்த மாதம் 20 ஆம் திகதி நெடுந்தீவு கடலில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட 6 இந்திய மீனவர்களில் 4 பேருக்கு ஆறு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத் தண்டனை வழங்கி ஊர்காவற்றுறை நீதவான் நிபந்தனையுடன் விடுதலை செய்தார்.

குறித்த வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றில் நீதவான் நளினி சுபாஸ்கரன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கை ஆராய்ந்த நீதவான் 6 பேரில் 4 பேருக்கு ஆறு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத் தண்டனை வழங்கி நிபந்தனயுடன் விடுதலை செய்தார்.

இந்த 6 பேரில் இருவர் படகோட்டிகள் என்பதால் அவர்களுக்கு ஆறுமாத கடூழியச் சிறைத்தண்டனை வழங்கி உத்தரவிடப்பட்டிருந்தது.

அத்துடன் படகோட்டிகள் இருவருக்கும் தலா நான்கு மில்லியன் ரூபா அபராதத் தொகையும் விதிக்கப்பட்டது.

இதனைச் செலுத்த தவறின் மேலும் 3 மாதச் சிறை தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் நீதவான் நளினி சுபாஸ்கரன் உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 20 ஆம் திகதி நெடுந்தீவு கடலில் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை இரு படகுகளுடன் கடற்படையினர் இவர்களை கைது செய்திருந்தனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 20.03.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org